Reg. No. : P. 1632

விலை ரூ. 50/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 166 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# காணாமற்போனவர்களுக்காக புதிய சிறந்த இழப்பீட்டு பொதி!

## அதனைத் தயாரிக்க விசேட குழு நியமனம் யாழ்ப்பாணத்தில் அறிவித்தார் நீதி அமைச்சர்



யாழ்ப்பாணம், ஜூன். 21

காணாமற்போனவர்களுக்காக தற்பொழுது வழங்கப்படும் நிதியுதவி போதுமானதாக இல்லை என்பதால், அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதியதொரு சிறந்த இழப்பீட்டு பொதியைத் தயாரிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

இச்சந்திப்பில் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேலும் விபரிக்கையில்-

காணாமற்போன ஒருவருக்காக இதுவரை வழங்கப்பட்டு வரும் இரண்டு இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை தற்போதைய சூழலில் எதற்கும் போதுமானதல்ல. இதன் காரணமாக, பாதிக்கப்பட்ட இந்த உறவினர்களை ஒரு விசேட பிரிவினராகக் கருதி, அவர்களுக்கு முறையானதொரு 'இழப்பீட்டுப் பொதியை' வழங்குவது குறித்து புதிய குழு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

எமது அமைச்சின் நோக்கம் வெறும் இழப்பீடு

15

# வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜூன். 21

வட்டுக்கோட்டை பிரகடனத்தின் 50 ஆவது ஆண்டின் நிறைவு எழுச்சி மாநாடு நேற்று வெகு சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

50 எழுச்சி மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் தலைமையில்

15

# 11,790 மாணவர்கள் 9 'ஏ'!

கொழும்பு, ஜூன். 21

வெளியாகியுள்ள 2025 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, 2 இலட்சத்து 25 ஆயிரத்து 748 மாணவர்கள் உயர்தரத்தில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாக, பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ்.இந்திகா

15

# வடக்கில் 566 மாணவர்களுக்கு 9 'ஏ'!

யாழ்ப்பாணம், ஜூன். 21

வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70.1 சதவீதமானோர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

15

# கச்சதீவை மீளப் பெறுவது புத்திசாலித்தனமானதல்ல!

## சென்னையில் ஹக்கீம் திட்டவட்டம்



சென்னை, ஜூன். 21

கச்சதீவின் இறையாண்மை என்பது சர்வதேச சட்டம் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களின்படி ஏற்கனவே தீர்க்கப்பட்ட ஒரு விவகாரம் என்று முஸ்லிம்

15

# மாகாண சபைத் தேர்தல்கள் இவ்வருடம் சாத்தியமில்லை!

## மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 21

இலங்கையில் நிலுவையில் உள்ள மாகாண சபை தேர்தல்களை இந்த ஆண்டுக்குள் நடத்துவது சாத்திய மற்றது என

15



# சோமரத்ன ராஜபக்ஷவை, யாழ். அழைத்து வந்து புதைகுழி உள்ள இடங்களை கண்டறியவேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 21

கிருஷாந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷவை, யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து எந்தெந்த பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன என்பதை கண்டறிய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று முன் தினம்

15

# முன்னாள் அமைச்சர்களை கைது செய்ய வெகுவிரைவில் நீல, சிவப்பு அறிவிப்புகள்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால தகவல்

கொழும்பு, ஜூன். 21

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், வெளிநாடுகளில் இருப்பதாக நம்பப்படும் முன்னாள் அமைச்சர்களையும், பாதாள உலகக் குழுத் தலைவர்களையும் திரும்ப அழைத்து வருவதற்காக, எதிர்காலத்தில் நீல அறிவிப்புகள் அல்லது சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் பேசிய அமைச்சர், முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக இருந்தாலும் சரி அல்லது பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக இருந்தாலும் சரி, நீதிமன்றங்கள்

15

# நெடுந்தீவு அரச படகுச் சேவையை திங்களில் அதிகரிப்பதற்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஜூன். 21

நெடுந்தீவுக்கான அரச கடற் போக்குவரத்து சேவை நாளை திங்கள்கிழமை தொடக்கம் ஒவ்வொரு திங்கள் கிழமைகளிலும் அதிகரிக்க எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஒவ்வொரு திங்களும் நெடுந்தீவில் இருந்து காலை 6.15 மணி, காலை 6.45 மணி ஆகிய நேரங்களில் குறிகாட்டுவான் நோக்கி புறப்பட்டு மீண்டும் குறிகாட்டுவானில் இருந்து காலை 7.30 மணி, காலை 8.30 மணி ஆகிய நேரங்களில் நெடுந்தீவை நோக்கிச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

மாலைநேர சேவையில் தேவையேற்படின்

15

# சவக்காரத்துக்கு வரி; சூதாட்ட நிறுவனங்களுக்கு சலுகையா?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

கொழும்பு, ஜூன். 21

சாதாரண பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சவக்காரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு 22 வீதம் வரை வரி விதிக்கப்படும் நிலையில், பாரிய இணையவழி சூதாட்ட நிறுவனங்களிடமிருந்து அரசாங்கம் உரிய முறையில் வரி வசூலிப்பதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்க நிதி பற்றிய குழு

15

# வாய் மூலம் உணவு உண்பதை மட்டுமே தவிர்த்துள்ளார் சாலே!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூன். 21

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் சுரேஷ் சாலே, வாய் மூலமாக உணவு உட்கொள்வதை மட்டுமே தவிர்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்

15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதிய ஜனதா தமிழ்நாடு தலைவரை சந்தித்துப் பேசினார் சிறீதரன் எம்.பி.!



சென்னை, ஜூன். 21

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் நயினார் நாகேந்தி ரனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின்போது, தாயகத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சமகால அரசியல் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, தமிழர்களின் பூர்வீக இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு, அவ்விடங்களில் திட்டமிட்ட முறையில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றமை மற்றும் செம்மணி மனிதப் புதைகுழியில் தற்போது தோண்டப்பட்டு வரும் எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டதோடு, தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளுக்கான நீதியை நிலைநாட்டுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பிலும் இருதரப்புக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

சந்திப்பில், தமிழ் மக்களின் அரசியல் விவகாரங்களில் 50 ஆண்டுகால நீண்ட அனுபவமிக்க மூத்த தலைவரான கே.எஸ். ராதாகிருஷ்ணன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மற்றும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யாழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் கடும் சவால்கள்!

## கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் கவலை



யாழ்ப்பாணம், ஜூன். 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு அனைத்து அதிகாரிகளின் ஒத்துழைப்பும் வேண்டும் என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே கடற்தொழில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் கடந்த 06 மாதங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நோக்கினால், மீள்குடியேறிய மக்களுக்காக 827 வீடுகளும், வறுமை நிலையில் உள்ள ஏனைய மக்களுக்காக 281 வீடுகளும், சமுர்த்தி பயனாளிகளுக்காக 45 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 379 வீடுகளுக்கான திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு வீடும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று விவசாயத் திட்டங்களுக்காக 06 திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா அபிவிருத்திக்காக 04 பாரிய திட்டங்களும், விளையாட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்காக 05 திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று போக்குவரத்து அபிவிருத்திக்காக பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமிய வீதி புனரமைப்புக்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளடங்கலாக ரூபா 2500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக நெடுந்தீவுக்கான வடதாரகை மற்றும் நெடுந்தாரகை படகுகள் திருத்தம் செய்யப்பட்டு அவை கடல் போக்குவரத்து சேவைகளில் ஈடுபட்டுள்ளன.

அதேபோன்று சமூக சக்தியினால் பல திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதில் 719 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 652 மில்லியனில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய உற்பத்தி திறன் செயற்பாடுகளுக்காக 17 திட்டங்களுக்கும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட உட்கட்டுமானங்களை மீட்டெடுப்பதற்காக 03 திட்டங்களுக்காக ரூபா 32 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பால் உலக வங்கி மற்றும் சர்வதேச வங்கிகளிடமிருந்து மேலும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர்களுக்கு 125 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளும்போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு அனைத்து அதிகாரிகளின் ஒத்துழைப்பும் வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை கணிசமான அளவுக்கு குறைந்துள்ளது. அண்மையில் இலஞ்ச ஊழல் செயற்பாடுகளை ஒழிப்பதற்கான அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது - என்றார்.

(அ)

# செம்மணி உண்மையை வெளிக்கொணர சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்!

## நோர்வே அதிகாரிகளிடம் சாணக்கியன்



ஒஸ்லோ, ஜூன். 21

செம்மணி புதைகுழி தொடர்பில் நம்பகமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்காக சர்வதேச தடயவியல் நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அவசியம் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நோர்வே அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், நோர்வே ஒஸ்லோவில் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் ஆப்கானிஸ்தான் பிரிவு அதிகாரிகளைச் சந்தித்து, இலங்கையின் மனித உரிமை நிலைமை, பொறுப்புக்கூறல் மற்றும் செம்மணி கூட்டுப் புதைகுழி விவகாரம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் இடம்பெற்று வரும் அகழாய்வுகளில் 380 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்து சாணக்கியன் விளக்கமளித்தார். இது இலங்கையில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய கூட்டுப் புதைகுழிகளில் ஒன்றாக கருதப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் பணிகளுக்கு போதுமான முன்னேற்றம் இல்லை எனத் தெரிவித்த அவர், நம்பகமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்காக சர்வதேச தடயவியல் நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அவசியம் என வலியுறுத்தினார்.

1998ஆம் ஆண்டு செம்மணி புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தற்போது ஸ்கொட்லாந்தில் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், இலங்கை அரசு விரும்பினால் சர்வதேச ஒத்துழைப்புடன் டி.என்.ஏ பரிசோதனைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், பொறுப்புக்கூறல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி உரிமைகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்களும் நோர்வே அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்தி, குறிப்பாக மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகள் தொடர்பாகவும் அவர் கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

இந்த ஐரோப்பிய பயணத்தின் போது, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே வெளிவிவகார அமைச்சு மற்றும் பல்வேறு ஜனநாயக மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சாணக்கியன் சந்தித்திருந்தார்.

(அ)

# அரியாலையில் போதைப்பொருடன் கைதானவரின் சொத்துகள் முடக்கம்!



யாழ்ப்பாணம், ஜூன் 19

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான பல சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - அரியாலைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவருடைய சொத்துக்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இதையடுத்தே, சட்டவிரோதமாக ஈட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவருக்குச் சொந்தமான பல சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

டிங்கி படகு, இரண்டு மோட்டார் சைக்கிள்கள், சொகுசுக் கார் மற்றும் கப் ரக வாகனம் என்பனவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆசிரியர் சேவை முதல் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை செப்ரெம்பரில்!

கொழும்பு, ஜூன். 21

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது.

ஆசிரியர்களின் பதவியுயர்வுக்கு அவசியமான மூன்று கட்ட வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகளின் முதற்கட்டமாக இது நடத்தப்படுகிறது.

ஆசிரியர் சேவையில் பதவியுயர்வு பெறுவதற்கு ஆசிரியர்கள் 3 வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதுடன், இதற்காக 10 பாடநெறிகளை கற்க வேண்டும்.

தரம் 2, தரம் ஐ ஆசிரியர்களுக்காக 3 பாடநெறிகளைக் கொண்ட 3ஆவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை நடத்தப்படும்.

முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நாளை முதல் ஜூலை மாதம் 17ஆம் திகதி வரை இணையவழியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திற்குச் சென்று விண்ணப்பிக்கலாம். (அ)

## வாரம் ஒருசிந்தனை 4

### மனித நெஞ்சறையில் இரு நுரையீரல்கள்

மூக்கு வழி காற்று நுரையீரலுக்குள் செல்வதும் வெளியேறுவதும். உள்ளே போவதும் மூச்சு வெளியே வருவதும் மூச்சு.

**மூச்சை மறந்தார் இறந்தார்**

காற்றுடன் 20% உயிர்ப்பி மூக்கு வழி உள்ளே போகும்.
மூச்சை உள்ளிழுக்க நுரையீரல் நிரம்பும்.
உயிர்ப்பி இரத்த ஓட்டத்தில் கலக்கும்.
30 நூறாயிரம் உயிர்க் கலங்களுக்கு உயிர்ப்பி செல்லும். அங்கே உணவை உடைக்கும் ஆற்றலைப் பெருக்கும் உயிர் வாழும் வளரும்.

**மூக்கு வழி மூச்சு உயிர்**

காற்றை நன்றாக உள்ளே வலிந்து இழுக்க.
இரத்த ஓட்டத்தில் உயிர்ப்பி கரையும் வரை காற்றை வைத்திருக்க.
இரத்த ஓட்டம் கொண்டு வந்த கழிவுக் கரியமில வாயு நுரையீரலுள் காற்றுடன் கரையும்.

**கழிவுக் காற்றை வெளியேற்றுக**

உடல் நலத்துடன் உயிர் வாழ
மூச்சுக் காற்றை மூக்கு வழி உள்ளிழுக்க
மூச்சை நுரையீரலுள் வைத்திருக்க
பின் மூச்சுக் காற்றை வெளியேற்றுக.
16 கைநொடிக் கால நீட்டத்துக்குக் காற்றை மூக்கு வழி உள்ளிழுக்க.
64 கைநொடிக் காலத்துக்கு நுரையீரலுள் வைத்திருக்க.
32 கைநொடிக் காலத்துக்கு மூச்சை மூக்கு வழி வெளியேற்றுக.

**1:4:2 விகிதம்**

மூச்சுப் பயிற்சி விகிதம்.
30 நூறாயிரம் உயிர்க் கலங்களை வாழ்விக்கும் விகிதம்.

**திருமுறைகள் 12**

10ஆம் திருமுறை திருமந்திரம்.
திருமூலர் நூலாசிரியர்.
திருமந்திரத்தில் 9 தந்திரங்கள்
3ஆவது தந்திரம் 5ஆவது தலைப்பு
மூச்சுப் பயிற்சி. 5 ஆம் பாடல்.

**உயிர் வாழும் மூச்சுப் பயிற்சி**

1:4:2 அறிவியல் விகிதத்தைத் திருமூலர் சொல்கிறார்.
மூச்சுப் பயிற்சிக்கான 1:4:2 விகிதத்தை மாற்றினால் உன்னை நீ ஏமாற்றுகிறாய்.
30 நூறாயிரம் உயிர்க் கலங்களுக்கு, உயிருக்கு, வஞ்சகம் செய்கிறாய் என்கிறார் திருமூலர்.

**ஏறுதல் பூரகம்**
**ஈரெட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பகம்**
**அறுபத்து நால்அதில்**
**ஊறுதல் முப்பத்**
**திரண்டு இரேசகம்**
**மாறுதல் ஒன்றின்கண்**
**வஞ்சக மாமே .**

–மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

# ஜனாதிபதியுடன் முரண்பாடா? மறுக்கிறார் பிரதமர் ஹரிணி!



கொழும்பு, ஜூன். 21

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தனக்கும் இடையில் பனிப்போர் நிலவுவதாக வெளியாகும் தகவல்களை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அடியோடு நிராகரித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு நிராகரித்தார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் கூறியவை வருமாறு ,

"தேசிய மக்கள் சக்திக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக கதைகள் கூறப்பட்டுவருகின்றன. இது எதிரணிகளின் எதிர்பார்ப்பாகும். ஆனால் உண்மை அதுவல்ல.

தேசிய மக்கள் சக்தியாக நாம் ஒற்றுமையாக செயல்பட்டுவருகின்றோம். தேசிய மக்கள் சக்திக்குள்தான் ஜே.வி.பியும் இருக்கின்றது.

ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் பனிப்போர் எனவும் கூறுகின்றனர். எனக்கு ஆதரவாக குழுவொன்று உள்ளது எனவும் கூறப்படுகின்றது. எதிரணிகள் வங்குரோத்து அடைந்துவிட்டது என்பதற்கு இப்படியான கட்டுக்கதை பரவல் சிறந்த சான்றாகும்."-என்றார். (அ)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை;
## மாவட்ட, பிரதேச செயலக மட்டங்களில் விசேட குழு!

கொழும்பு, ஜூன். 21

நாடு முழுவதும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துவதற்காக, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் செயற்படக்கூடிய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் குழுக்கள் பெயரளவில் மாத்திரம் இயங்காமல், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதற்கான செயற்திட்டங்களை நேரடியாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுக்கள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அரச, தனியார் நிறுவன வளாகங்களை உன்னிப்பாகக் கண்காணித்து, நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

மாவட்டங்கள் முழுவதும் டெங்கு ஒழிப்பு முயற்சிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக, உள்ளூர் அதிகாரிகளுடன் இந்தக் குழுக்கள் நெருக்கமாக இணைந்து செயற்படவுள்ளன.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் வாராந்தம் 30 முதல் 45 நிமிடங்களை தங்களின் வாழும் சூழலைத் தூய்மைப்படுத்துவதற்காக ஒதுக்கவேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

"இந்தத் தருணத்தில் நோயாளர்களை மருத்துவமனைகளில் அனுமதித்துச் சிகிச்சை அளிப்பதை விட, நோய் பரவாமல் தடுப்பதே எமது மிக முக்கியமான தேவையாகும்" என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஆசனப்பட்டி அணிவது நேற்று முதல் கட்டாயம்!

கொழும்பு, ஜூன். 21

வாகனங்களைச் செலுத்தும் போது ஆசனப்பட்டி அணியும் சட்டம் நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களிலுள்ள அனைத்துப் பயணிகளும் ஆசனப்பட்டி அணிந்திருக்கவேண்டும்.

வாகனங்களின் முன் இருக்கைகளில் மட்டுமன்றி, பின் இருக்கைகளில் பயணிக்கும் பயணிகளுக்கும் ஆசனப்பட்டி அணிவதைக் கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த சலுகைக்காலம் நேற்று முன் தினம் நிறைவடைந்துள்ளதுடன் நேற்று முதல் இந்தச் சட்டம் கட்டாயமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை குறிப்பிட்டுள்ளது.

சாதாரண வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் சாரதியும், முன் இருக்கையில் பயணிக்கும் மற்றைய பயணியும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாகும் அதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களின் சாரதி உள்ளிட்ட அனைத்துப் பயணிகளும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (அ)

## ரூ.37 கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, ஜூன். 21

கட்டுநாயக்க விமான நிலையத்தின் கோல்ட் ரூட் முனையத்தைப் பயன்படுத்தி, போதைப் பொருள் கடத்த முயன்ற டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவிலிருந்து டுபாய் வழியாக இலங்கை வந்த விமானத்தில் போதைப்பொருள்களைக் கொண்டு வந்துள்ளார். அவரது 2 பயணப் பொதிகளில் 146 பைக்கெற்றுகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 37.639 கிலோ கிராம் ஹசீஸ் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி சுமார் 37 கோடியே 70 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகநபர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

## துமிந்த திஸாநாயக்கவை மீண்டும் சந்தேக நபராகப் பெயரிட உத்தரவு

கொழும்பு, ஜூன். 21

ஹவ்லொக் சிற்றி சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசிய ரி-56 ரக துப்பாக்கி தொடர்பான வழக்கில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவை மீண்டும் சந்தேக நபராகப் பெயரிடுமாறு கல்கிஸை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இருப்பதாக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தெரிவிக்கப்பட்ட நிலையில், அடுத்த வழக்குத் தவணையில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் போதிய சாட்சியங்கள் இல்லை என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் துமிந்த திஸாநாயக்க வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும், புதிய சாட்சியங்களின் அடிப்படையில் அவர் மீண்டும் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்.-கொழும்பு ரயில் சேவையை மீள அதிகரிப்பது குறித்து ஆராய்வு!

## அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் கூட்டம்


யாழ்ப்பாணம், ஜுன். 21

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான ரயில் சேவைகளை மீள அதிகரித்தல், நேர அட்டவணைகளை மீளமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இலங்கை ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

வடக்கு மாகாணத்துக்கு பெருமளவான சுற்றுலாவிகள் வருகை தருவதாலும், பாதுகாப்பான மற்றும் நேரத்தை மீதப்படுத்தும் பயணமாக ரயில் போக்குவரத்து அமைவதாலும், கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் கூட்டத்தில் வலியுறுத்தினார். அத்துடன், பயணிகளின் வசதிக்கேற்ப தற்போதைய நேர அட்டவணைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ரயில்வே பொது முகாமையாளர், ரயில் இயந்திரங்களுக்கான பற்றாக்குறையே சேவைகளை முழுமையாக மீள ஆரம்பிப்பதில் பிரதான தடையாக உள்ளதெனத் தெரிவித்தார். எனினும், புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தற்காலிகமாகச் சேவைகளை அதிகரிப்பது மற்றும் பகல் நேர ரயில் சேவை களை ஒழுங்கமைப் பது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுப் பதாக உறுதியளித் தார்.



அத்துடன், 'யாழ். ராணி' ரயில் சேவையில் அவசியமான மாற்றங்களை மேற்கொண்டு, அதனை வவு னியா வரை நீடிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது அநுராதபுரம் வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் சரக்கு ரயில் சேவையை, வடக்கு மாகாணத் தின் காங்கேசன்துறை வரை விரிவுபடுத்துமாறு ஆளுநர் விடுத்த கோரிக் கையை ஏற்றுக் கொண்ட ரயில்வே பொது முகாமையாளர், அதற்கான துரித நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டலில், நாடளாவிய ரீதியில் பன்முகப் போக்குவரத்து மையங்களை அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இதன்போது தெளிவுபடுத்தினார். பஸ் மற்றும் ரயில் சேவைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் இவ்வாறான பிரதான நிலையங்களை, வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் பற்றைக்காடுகளாகக் காணப்படுவதுடன், சில பகுதிகளில் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத அக்காணிகளைத் துப்புரவு செய்து, மக்களுக்கே வழங்கும் சாத்தியக்கூறுகளைப் பரிசீலிக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள அன்னசத்திர வீதியை ரயில்வே திணைக்களம் மூடியுள்ளமைக்கு மக்கள் மத்தியில் எழுந்துள்ள கடும் அதிருப்தியை ஆளுநரும், அமைச்சர் இ.சந்திரசேகரும் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த ரயில்வே அதிகாரிகள், ரயில்வே பாதைகள் தொடர்பான 'மாஸ்டர் பிளான்' அடுத்த ஓராண்டுக்குள் நிறைவடையும் எனவும், அதன் பின்னரே காணிகள் மற்றும் வீதிகள் விடுவிப்புத் தொடர்பில் இறுதி முடிவுகள் எட்டப்படும் எனவும் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ரயில் பாதைகள் அதிக வேகத்தில் பயணிக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதால், குறுக்கறுக்கும் வீதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, பிரதான வீதிகளுடன் இணைக்கும் சமாந்தர வீதிகளை அமைப்பதே விபத்துகளைத் தவிர்க்கும் சிறந்த வழிமுறை என ரயில்வே பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

'டித்வா' பேரிடரால் சேதமடைந்து இடைநிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவையை, மடுத் திருவிழாவுக்கு முன்னதாக மீள ஆரம்பிப்பதற்குச் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பொது முகாமையாளர் உறுதியளித்தார்.

மாவட்டத்தின் ஒரேயொரு ரயில் நிலையமான மாங்குளத்தில் அனைத்து ரயில்களும் நிற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன், அங்கு பன்முகப் போக்குவரத்து மையமொன்றை அமைப்பதன் ஊடாக தற்போதைய காணி மற்றும் போக்குவரத்துப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. (அ)

# கதிர்காம காட்டுப் பாதை திறப்பில் மாற்றமில்லை!

காரைதீவு, ஜுன். 21

கதிர்காம காட்டுப் பாதை திறப்பு எதிர்வரும் ஜுலை மாதம் 10 ஆம் திகதி என்பதில் மாற்றமில்லை.

அதேவேளை, உகந்த மலையில் இருந்து குமுக்கன் செல்லும் வழியில் அன்னதானம் தயாரித்து வழங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேவையானால் உகந்தையில் சமைத்து ஒரிரு மணி நேரத்தில் கொண்டு சென்று வழங்கலாம் எனக் கூறப்பட்டது.

கதிர்காமம் ஆடிவேல்விழா பாதயாத்திரை காட்டுப்பாதை தொடர்பான முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டம் லாகுகலை பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அனுபம மங்கள தலைமையில் நடைபெற்றது.

பொது மக்கள் அறியவேண்டிய பல அறிவுறுத்தல்கள் தீர்மானங்களை வெளியிடும் இக்கூட்டத்திற்கு ஊடகங்கள் அழைக்கப்படவில்லை. கடந்த தடவை அரச அதிபர் முன்னிலையில் இது பற்றி சுட்டிக் காட்டப்பட்டபோது அடுத்த தடவை நிவர்த்தி செய்யப்படும் என்று அப்போது கூறப்பட்டது. எனினும் இம்முறையும் அதே தவறை அதிகாரிகள் செய்துள்ளதாக ஊடக அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

உகந்தமலை ஆலய வண்ணக்கருக்கும் எழுத்து மூல அழைப்பிதழ் அனுப்பப்படவில்லையெனத் தெரியவருகிறது. அவரும் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை.

அதேவேளை, ஏனைய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் சிலருக்கும் சிங்களத்தில் அழைப்பிதழை லாகுகலை பிரதேச செயலாளர் அனுப்பியுள்ளார்.

இதன்போது, 2026 ஆம் ஆண்டுக்கான கதிர்காமம் ஆடிவேல்விழா பாதயாத்திரையுடன் தொடர்புடைய பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்படி, கதிர்காமம் நோக்கி காட்டுப்பாதை வழியாகச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்காக காட்டுப்பாதை எதிர்வரும் ஜுலை 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்று அதிகாலை 5.00 மணிக்கு உகந்தை முருகன் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 6.00 மணிக்கு காட்டுப் பாதை திறக்கப்படவுள்ளதுடன், பிற்பகல் 3.00 மணிக்குப் பின்னர் முதல் பாதயாத்திரைக் குழுக்கள் பயணத்தை ஆரம்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜுலை 10 ஆம் திகதி முதல் ஜுலை 24 ஆம் திகதி வரை தினமும் காலை 6.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மட்டுமே பாதயாத்திரிகர்கள் காட்டுப்பாதையில் பயணிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

வவுனியா, ஜுன். 21

வவுனியா மாவட்டத்தைப் பாதுகாப்பதற்கான விசேட ஒழிப்புத் திட்டம், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில், நேற்று முன் தினம் காலை வவுனியா ஈரட்டபெரியகுளம் பகுதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தற்போதைய நிலவரப்படி, வவுனியா பொது வைத்தியசாலையில் 5 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியுள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு என்றாலும், ஈரட்டபெரியகுளம் பகுதியில் நோய் பரவக்கூடிய அபாயம் அதிகமாக இருப்பதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாகவே, டெங்கு அச்சுறுத்தலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தும் நோக்கில், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் தவிசாளர் சுதர்சன வீரக்கோன் உட்பட உள்ளூராட்சி பிரதிநிதிகள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் இணைந்து குறித்த செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதவாச்சி-தலைமன்னார் வரை பரீட்சார்த்தமான ரயில் சேவை!

மன்னார், ஜுன். 20

டித்வா புயல் காரணமாக பல ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ள நிலையில் மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரை ரயில் சேவையின் பரீட்சார்த்த நடவடிக்கை நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு வரையான ரயில் சேவை, கடந்த 6 மாதங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாத இறுதிப் பகுதியில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக, ரயில் பாதைகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ரயில் பாதைகள் புனரமைப்பு செய்யப்பட்ட நிலையில், தலைமன்னாரில் இருந்து கொழும்பு வரையிலான ரயில் சேவைகளை முன்னெடுக்க, ரயில் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைவாக, நேற்று முன் தினம் மதியம், மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரை ரயில் சேவையின் பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அந்தவகையில், விரைவில் தலைமன்னாரில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன. (அ)

# மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வடக்கின் பங்களிப்பை உயர்த்துவதற்கு திறன் உண்டு

## மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன். 21

வடக்கு மாகாணத்தின் வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி, அதற்கான வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை 10 வீதத்துக்கு மேல் அதிகரிக்க முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை கௌரவிக்கும் இரண்டாவது வர்த்தகச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.ஏ.முஹம்மட் ஹமிஸ், சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், தொழில் முயற்சியாளர்கள், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட செயலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
21.06.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், ஆனி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அர்ச்சுனாவின் அட்டகாசங்கள்

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் என்பவர் 2024 நவம்பர் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து சுயேச்சை உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதில் இருந்து அவரது நடத்தைகள் பொது வெளியில் சினமூட்டுபவையாகவும் அவருக்கு வாக்களித்தவர்களின் விவேகத்தை மாத்திரமல்ல, முழு யாழ்ப்பாணச் சமூகத்தினதும் விவேகத்தை நிந்தனை செய்பவையாகவும் அமைந்திருக்கின்றன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முறைகேடுகளை அம்பலப்படுத்தியவராக தன்னைக் காட்டிக் கொண்டதன் மூலமாக யாழ்ப்பாண மக்களில் ஒரு பிரிவினர் மத்தியில் பிரபலமானதைத் தொடர்ந்து பொது வாழ்வில் பிரவேசித்த அவரின் அரசியல் பயணத்தில் தொடர்ச்சியாக கோமாளித்தனமானதும் விசமத்தனமானதுமான நடத்தைகள் தமிழ்ச் சமூகம் இன்று இருக்கும் நெருக்கடிகள் மிகுந்த சூழ்நிலையில் வீணான சர்ச்சைகளைத் தோற்றுவித்து வருகின்றன.

பாராளுமன்றத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டங்களிலும் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்களின் கூட்டங்களிலும் அர்ச்சுனாவின் நடத்தைகள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பொறுப்பு வாய்ந்த தீர்மானங்களை எடுப்பதற்கு பெரும் இடையூறாக இருந்து வருகின்றன.

பாராளுமன்ற உறுப்பினராக அவர் பதவி வகித்துவரும் இதுவரையான ஒன்றரை வருடங்கள் "விளங்காத்தன்மையான ஒழுங்குப் பிரச்சினை கிளப்பல்களும் பாராளுமன்றத்தின் கண்ணியத்துக்கு ஒவ்வாத உரைகளும் நிறைந்ததாக இருந்து வந்திருக்கிறது. இதனால் சபை நடவடிக்கைகள் பல தடவைகள் குழப்பத்திற்குள்ளாகின.

2025 மே மாதத்தில் பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக இடையூறு விளைவித்தமைக்காக சபாநாயகரின் உத்தரவின் பேரில் அர்ச்சுனா சபையில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். அதற்கு பின்னரும் அவரின் போக்கில் மாற்றமில்லை. மாறாக அடாவடித்தனங்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் வடபிராந்தியத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் கூட்டங்களிலும் அனுபவமிக்க அதிகாரிகள் பற்றி அவர் பேசுகின்ற விடயங்களும் அவர்களை கையாளுகின்ற முறையும் மிகவும் அநாகரிகமானதாக இருப்பதுடன் ஒரு வைத்தியருக்குரிய குறைந்தபட்ச கண்ணியத்தைக் கொண்டவையாகவும் இல்லை.

அர்ச்சுனாவின் இத்தகைய அருவருக்கத்தக்க நடத்தைகள் குறித்து யாழ்ப்பாணச் சமூகம் பெரிதாக எதிர்வினையைக் காண்பிக்காமல் மெத்தனமாக இருப்பதை நோக்கும்போது கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத தியாகங்களையும் இழப்புகளையும் கொண்ட மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்டத்தைக் கடந்து வந்த ஒரு சமூகமா இது என்ற கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை.

சமூக ஊடகங்களின் விளம்பரங்களுக்காக அவர் அரங்கேற்றும் "கோமாளி" நாடகங்களை விரும்பி ரசித்து தொடர்ச்சியாக பதிவுகளைச் செய்யும் பெருமளவு பேர்வழிகள் அர்ச்சுனாவின் நடத்தைகள் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்படுத்துகின்ற சேதத்தைப் புரிந்து கொள்ள முடியாத அறிவிலிகளாக இருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தமிழ்நாட்டு அரசியல்வாதி ஒருவரை சுட்டுக்கொலை செய்வது பற்றி அவர் கூறினார். பாரம்பரிய கட்சி ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு இயங்கும் ஒரு சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினரின் இத்தகைய வரம்புமீறிய நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நிறுவன ரீதியான தடுப்பு நடவடிக்கைகளும் பொதுமக்களின் அழுத்தமும் இணைந்த கூட்டு முயற்சிகள் அவசியமாகும். இதை இனி மேலும் இப்படியே விட்டுவிட முடியாது.

பாராளுமன்றத்திற்குள் எந்தவொரு கட்சியின் கொறடாவினதும் உத்தரவுக்கு கட்டுப்படாதவர் என்பதால் அர்ச்சுனா சம்பந்தப்பட்ட விடயத்தில் பாராளுமன்ற ஒழுக்கத்தைப் பேணும் முதன்மைப் பொறுப்பு பாராளுமன்ற சபாநாயகருக்கும் சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினர்களுக்கும் நேரடியாகவும் முழுமையாகவும் உரியதாகும்.

இவ்வளவு காலமும் பாராளுமன்றத்திலும் மாவட்ட அபிவிருத்தி குழுக்களிலும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்களிலும் அவரது "சேஷ்டைகள்" ஏன் சகித்துக் கொள்ளப்படுகின்றன?

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# அமெரிக்காவுடனான புரிந்துணர்வு
## உடன்படிக்கை ஈரானுக்கு கிடைத்த வெற்றி



- த கார்டியன்

பொருளாதாரத் தடைகளில் இருந்து நிவாரணம் மற்றும் மேலும் தலையிட மாட்டோம் என்ற அமெரிக்காவின் வாக்குறுதியுடன், இந்த மோதல் தெஹ்ரானின் (ஈரான்) நிபந்தனைகளின்படி சுமுகமாக முடிவுக்கு வந்துள்ளது.

டொனால்ட் டிரம்ப், அவரும் பெஞ்சமின் நெதன்யாகுவும் நான்கு மாதங்களுக்கு முன்பு ஈரானுக்கு எதிராகத் தொடங்கிய பேரழிவுகரமான போரிலிருந்து தப்பிக்க வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறார். அந்தந்த தருணத்திற்கு எது பொருத்தமாகத் தோன்றுகிறதோ, அதை அவர் பேசுகிறார். உண்மையில், தனது நண்பரான இஸ்ரேலிய பிரதமரை இப்போது அவர் கைவிடலாம் என்று தெளிவாக உணர்கிறார். அவர் தெஹ்ரானின் ராணுவ ஆட்சிக்கு 300 பில்லியன் டொலர் மறுசீரமைப்பு நிதி, பொருளாதாரத் தடைகளின் முடிவு மற்றும் அதன் உள்விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்ற வாக்குறுதி ஆகியவற்றை வழங்குகிறார்.

இவை அனைத்தும் ஒரு "பெரிய வெற்றி" என்று அறிவிக்கப்படுகின்றன. அப்படி இருந்தால், நல்லது. அடுத்த 60 நாட்களுக்கான பேச்சுவார்த்தைகள் கடினமானதாகவும் கணிக்க முடியாததாகவும் இருக்கும். ஆனால், குறைந்தபட்சம் அவை ஒரு நம்பகமான - மற்றும் மாற்ற முடியாத - திசையை நோக்கி நகர்கின்றன.

நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு போரிலிருந்து, அது கைமீறிப் போவதற்கு முன்பாகவே, ஒரு அமெரிக்க அதிபர் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பது இதுவே முதல் முறையாகத் தெரிகிறது. ஈரான் மற்றொரு வியட்நாம், ஆப்கானிஸ்தான் அல்லது ஈராக் ஆக மாறப்போவதில்லை. அதற்கும் மேலாக, கடந்த வாரத்தில், டிரம்ப் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாட்டின் மீது அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

லெபனான் மீது நெதன்யாகு தொடர்ந்து குண்டுவீசி வருவதால் ஆத்திரமடைந்த டிரம்ப்: "நீங்கள் ஒருவரைக் தேடும் போதெல்லாம் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை இடிக்க வேண்டிய அவசியமில்லை" - அதாவது ஒருவரைக் கொல்வதற்காக - ஏனெனில் "அந்த அடுக்குமாடி குடியிருப்புகளில் நிறைய மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் அனைவரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் அல்ல" என்று குறிப்பிட்டார்.

இத்தகைய தார்மீகப் பேச்சுக்கள் ஒருபுறமிருக்க, டிரம்பின் ராணுவப் படைகளும் இஸ்ரேலும் இணைந்து 3,300க்கும் மேற்பட்ட ஈரானியர்களைக் கொன்றுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவர்களில் ஒரு பெண்கள் பள்ளியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட குழந்தைகளும் அடங்குவர். மேலும் பலரைக் காயப்படுத்தியுள்ளனர்.

பனிப்போரின் முடிவிற்குப் பிறகு, சமீபத்திய அனைத்து அமெரிக்க அதிபர்களையும் பாதித்த அதே அதிகாரத்தைக் காட்டும் ஆசைதான், பிப்ரவரியில் டிரம்ப்பையும் தூண்டியது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மூலையிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஒரு பிரம்மாண்டமான ராணுவ இயந்திரத்தின் மூலம் அதிகாரத்தை வெளிப்படுத்தும் எளிய ஆசை மட்டுமே.

தலையிடுவதற்கான காரணம் என்பது ஒரு பொருட்டே அல்ல. கொசோவோ அல்லது குவைத்தில் நடந்தது போல, இந்தத் தலையீடு விரைவாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்போது, அது ஓரளவுக்கு வேலை செய்கிறது. வெனிசுலா ஆட்சியின் சமீபத்திய வீழ்ச்சியில் டிரம்பின் நடவடிக்கை திறம்பட இருந்தது.

ஆனால் பெரும்பாலான நேரங்களில், இந்த ராட்சத நாடு மாட்டிக்கொள்கிறது. பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடாத ஒருவராகக் கருதப்பட்ட டிரம்ப், இத்தகைய தூண்டுதல்களைத் தவிர்ப்பதாக உறுதியளித்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு சவுதி அரேபியாவில், ஆற்றிய உணர்ச்சிப்பூர்வமான உரையில் அவர் இதேபோன்ற ஒரு உறுதிமொழியை அளித்தார். வாஷிங்டனின் தலையீடுகள் முடிந்துவிட்டன. "அமெரிக்கா தனது வாழ்க்கை முறையை மற்றவர்கள் மீது திணிக்க முயலாது, மாறாக ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையின் உணர்வோடு எங்கள் கரங்களை நீட்டும்." அப்போது அவர் வானளாவப் பாராட்டப்பட்டார்.

பிப்ரவரியில் டிரம்ப் அந்த உறுதிமொழியை வெளிப்படையாக மீறியது, அவரது அப்போதைய நண்பர் நெதன்யாகுவால் தூண்டப்பட்ட ஒரு தனிப்பட்ட முடிவாகத் தோன்றுகிறது.

இஸ்ரேலியர்கள் ஈரானின் தலைவர்களைக் கொன்றுகொண்டிருந்தபோது, டிரம்ப் ஒரு பெரிய குண்டுவீச்சுத் தாக்குதலைத் தொடுப்பார், அது எப்படியோ ஈரானியர்களை கிளர்ந்தெழச் செய்து அவர்களின் அரசாங்கத்தை வீழ்த்த வழிவகுக்கும் என்று கருதப்பட்டது. இதற்கான காரணம் மிகவும் பலவீனமானதாகவும் மேலோட்டமானதாகவும் இருந்தது: அந்த ஆட்சியின் அணு ஆயுதங்களை உருவாக்கும் திறன் ஒரு நாள் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறும் என்பதுதான் அது. இது ஜார்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் டோனி பிளேயர் ஆகியோர் 2003-ல் ஈராக் மீது படையெடுத்ததற்கு அளித்த அதே விவரிக்க முடியாத காரணத்தின் மறுபதிப்பு மட்டுமே.

இந்தப் போருக்காக டிரம்ப் அறிவித்த உத்தி நம்ப முடியாததாக இருந்தது. "நான்கு முதல் ஐந்து வாரங்களில்" வெற்றி கிடைக்கும் என்று எந்தவொரு உளவுத்துறையும் பரிந்துரைத்திருக்க முடியாது. வெற்றி என்பதற்கான வரையறை தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டது. அது ஈரானியப் புரட்சியாக இல்லாமல் இருக்கலாம் அணு ஆயுத வசதிகளை அழிப்பதாக இருக்கலாம், இருப்பினும் அவை கடந்த ஆண்டே அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது் அல்லது "அணுசக்தி தூசுகளை" கைப்பற்றுவதாக இருக்கலாம், அல்லது ஈரானிய அரசு சொத்துக்களை பெருமளவில் அழிப்பதாக இருக்கலாம். ஈராக்கைப் போலவே, இதுவும் போருக்குச் செல்வதற்கான ஒரு பள்ளிச் சிறுவனின் சாக்குப்போக்கு போலவே தோன்றியது.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து டிரம்ப் விரைவாக வெளியேற உதவுவதே இப்போது அமெரிக்காவின் நட்பு நாடுகளின் பணியாக இருக்க வேண்டும்.

தெஹ்ரான் அணு ஆயுதங்களைக் கைவிடுவதாகத் தனது நீண்டகால வாக்குறுதியை மீண்டும் மீண்டும் கூறியுள்ளது. லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை வாஷிங்டனால் கட்டுப்படுத்துவது கடினம் என்பதை ஈரான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கலாம். அது எளிதாக இருக்காது. ஆனால், இந்தத் தீர்வு தெஹ்ரான் ஆட்சிக்குக் கிடைத்த ஒரு தெளிவான வெற்றி என்பதால், ஈரானின் தலைவர்கள் இந்த விஷயத்தை மேலும் வற்புறுத்தாமல் இருப்பது புத்திசாலித்தனமாக இருக்கும்.

இந்தப் போரின் சிறந்த விளைவு, பொருளாதாரத் தடைகளை நீக்குவதும், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் தொடர்புகளுக்கு ஈரானைத் திறப்பதும்தான். எந்தவொரு குண்டுவீச்சையும் விட, இதுதான் சமூகத்தின் மீதான அந்த ஆட்சியின் பிடியைத் தளர்த்தும் வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. நீண்ட கால நோக்கில், அந்த நாட்டில் அரசியல் சுதந்திரத்திற்கான ஒரே வழி இதுவாகத்தான் இருக்கும். தனிமைப்படுத்துதல் என்பது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது, ஈரானை அடிப்படைவாத இஸ்லாத்தின் புராணக்கதைகளில் மேலும் மூழ்கடித்து, ரஷ்யா மற்றும் சீனாவின் கைகளில் தள்ளியுள்ளது. இது மேற்கத்திய நலன்களுக்கு முற்றிலும் எதிரானதாக அமைந்தது.

இந்தப் போர் மற்றொன்றையும்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுகளை ஏற்பதில் கவனம் தேவை!

இரா. சாந்தகுமார்

மனிதர்களிடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் அன்பும் கனிவும் மிக்க வார்த்தைகளைப் போல பரிசளித்தல் எனும் பண்பின் பங்கும் அளப்பரியது. பொதுவாக பரிசுப் பொருள்களின் மதிப்பு பரிசளிப்பவரின் மன உணர்வின் பிரதிபலிப்பாகவே கருதப்படுவதால் நம் சமூகத்தில் பரிசுகளை அளிப்பதிலும், பெறுவதிலும் அதிக ஆர்வம் காணப்படுகிறது.

ஒருவரை ஊக்குவித்து அவரின் திறமையை வெளி உலகுக்கு கொண்டு வருவதில் பரிசுகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. பணியிடங்களில் சிறப்பாக பணியாற்றுவோருக்கு நிர்வாகத்தால் பாராட்டி அளிக்கப்படும் பரிசுகள், பரிசு பெறுவோர் தமது வேலைத் திறனை மேலும் அதிக அளவில் வெளிப்படுத்த உதவுகிறது.

பள்ளி இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்றால் பரிசுகள் தருவதாக பெற்றோர், ஆசிரியர்களால் அளிக்கப்படும் உறுதிமொழிகள் தேர்வில் மாணவர்கள் அதிகப்படியான மதிப்பெண்களைப் பெறுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. சமீப ஆண்டுகளில் வியாபார நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களின் பொருள்களை வாங்குபவருக்கு பரிசுகள் அளிப்பது வாடிக்கையாகி வருகிறது.

பெரும்பாலான அரசு நிறுவனங்களில் புத்தாண்டு தினம் மற்றும் பண்டிகை தினத்தன்று, உயரதிகாரிகளைச் சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதுடன் பரிசுகள் தருவது மிகச் சாதாரணமான ஒன்றாகி விட்டது. இச்செயல், லஞ்சம் வாங்குவதற்கு ஒப்பானது. ஊழல் தடுப்புச் சட்டம் லஞ்சம் தருபவர்கள், வணிக நிறுவனங்கள் அதைப் பெறும் அதிகாரிகள் குற்றச் செயல் புரிந்தவர்கள் ஆவர் என வரையறுக்கிறது. அரசு உயரதிகாரிகளுக்கு அன்பளிப்பு, பரிசுகள், நன்கொடை என்ற போர்வையில் லஞ்சம் அளித்து அரசு அலுவலகங்களில் முறைகேடாக காரியங்களை சாதித்துக் கொள்வோர் தற்போதும் உள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தியாவில் குடியரசுத் தலைவர் பதவி வகித்த மரியாதைக்குரிய அப்துல் கலாம் தமது பதவிக்கால முடிந்த நிலையில், தம் பதவிக்காலத்தின்போது தமக்கு அளிக்கப்பட்ட அனைத்து பரிசுப் பொருள்களையும் தன்னுடன் எடுத்துச்



செல்லாது, அரசின் காப்பகத்தில் ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசுகள் என்றாலே ஆர்வத்துடன் அவற்றை அடைய நினைக்கும் மனநிலை பெரும்பாலான மனிதர்களிடம் உண்டு. பல போர்களை தாம் நிறுத்தியதாகவும், அதற்காக சமாதானத்துக்கான நோபல் பரிசு தமக்குத் தர வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தமது பேராசையை வெளிப்படுத்தினார். இதற்கு நேர்மாறாக கடந்த காலங்களில் நோபல் பரிசு வேண்டாம் என மறுத்த பிரபலங்களும் இருந்தனர்.

பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் ழான் பால் சார்த்ரே, *1964*-ஆம் ஆண்டு தமக்கு அளிக்கப்பட்ட இலக்கியத்துக்கான நோபல் பரிசை வேண்டாம் என மறுத்தார். எந்த ஓர் அங்கீகாரத்தையும், விருதையும் தான் பெறுவது இல்லை என்ற கொள்கையின் அடிப்படையில் நோபல் பரிசை தாம் மறுப்பதாக ழான் பால் சார்த்ரே தெரிவித்தார்.

இதே போன்று சமாதானத்துக்கான நோபல் பரிசை முன்னாள் அமெரிக்க அதிபர் ஹென்றி கிஸ்ஸிங்கருடன் பகிர்ந்துகொள்ள வியத்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவை சேர்ந்த லே டக் தோ, *1973*-ஆம் ஆண்டு கேட்டுக்கொள்ளப்பட்டபோது, "தமது நாட்டில் இன்னமும் அமைதி நிலவவில்லை", எனக் கூறி அந்தப் பரிசை ஏற்க மறுத்தார் லே டக் தோ.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தமது குழுவினருடன் அண்மையில் சீனாவுக்கு சென்று திரும்பினார். அவ்வாறு திரும்ப முற்படுகையில் சீன அதிகாரிகள் அமெரிக்க அதிபருடன் வந்திருந்த குழுவினருக்கு பரிசுப் பொருள்கள் வழங்கினர். அமெரிக்கக் குழுவினர் பெற்றுக்கொண்ட பரிசுப் பொருள்களை அவர்கள் தங்கள் பயன்பாட்டுக்கு எடுத்துச் செல்வதை அமெரிக்க அரசு தடுத்து விட்டது. இதற்குக் காரணம் சீனர்கள், அமெரிக்க அரசை உளவு பார்க்கும் விதத்தில் பரிசுப் பொருள்களில் அதற்கான தொழில்நுட்பத்தை இணைத்திருக்கலாம் என டொனால்ட் ட்ரம்ப் நினைத்ததே.

பரிசுப் பொருள்கள் அவற்றை பெறுவோருக்கு மகிழ்ச்சி ஏற்படுத்துவதற்குப் பதிலாக சிக்கலை ஏற்படுத்துவதும் உண்டு. பாகிஸ்தானின் பிரதமராக இம்ரான் கான் இருந்தபோது, சவூதி அரேபியா உள்ளிட்ட அரபு நாடுகளில் அரசுமுறை சுற்றுப்பயணம் செய்தார். அந்த நாடுகளில் அவருக்கு விலை உயர்ந்த கடிகாரங்கள் உள்ளிட்ட பல பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. அவற்றை பாகிஸ்தான் நாட்டின் சட்ட விதிகளின்படி அந்நாட்டு அரசுக் கருவூலத்தில் சேர்க்காமல், அவற்றை விற்று பணம் பெற்றுக் கொண்டதற்காக அவருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

எவ்வித உள்நோக்கமும், கைம்மாறும் கருதாது அன்புடன், திறமையை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் அளிக்கப்பட்டால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறேதும் இல்லை. அதே சமயத்தில், தன்னலத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பரிசு பெறுபவரை தன்வசப்படுத்தி, அவரின் நேர்மையை தடம்புரள வைக்கும் சூழலை, தரப்படும் பரிசு உருவாக்கும் எனில், அந்தப் பரிசை ஏற்றுக் கொள்ள மறுப்பதே உன்னதமான செயலாகும். (தினமணி)

# இந்தவார ராசிபலன் 21.06.2026 - 28.06.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 07

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலனபடி, பயண அலைச்சல்கள் அதிகம் இருந்தாலும், ஆதாயமும் கிடைக்கும். மனதில் ஏதேனும் டென்ஷன் உண்டாகலாம். மற்றவர்களுக்கு முன் ஜாமீன் போடும் முன் யோசிக்கவும். குடும்ப பாரம் காரணமாக அமைதி குறையலாம். பெரியோர்களின் தலையீட்டால் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். உத்யோகத்தில் வேலைபளு குறையும். தொழில், வியாபாரத்தில் உள்ள சூட்சமங்கள் புரியவரும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, நீங்கள் எடுத்த முடிவுகளில் உறுதியாக இருப்பது நல்லது. மேலும் சில பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டாலும், கணவன் மனைவிடையே நெருக்கம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். நீண்ட நாட்களாக தள்ளி போன காரியங்கள் விரைவில் முடியும். நீண்ட நாட்களாக படுத்தி வந்த உடல்நிலை சீராகும். மனதில் தெம்பு பிறக்கும்.அடுத்தவர்களுக்கு ஆதரவாக செயல்படும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கியே நிற்கும். தொழில், வியாபாரம் விருத்தி பெரும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, எல்லோரிடமும் சமமாகப் பழகும் குணம் உங்களிடம் இருக்கும். உறவுகளிடம் சுமூகமான நிலை நீடிக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத் துணை மூலம் ஆதாயம் கிடைக்க பெறுவீர்கள். முக்கிய விஷயங்களில் சற்று நிதானத்தை கடைபிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். உத்யோகத்தில் பணிகளை திருப்திகரமாக செய்ய முடியும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். மற்றவர்களிடம் பேசும் போது வார்த்தையில் பொறுமையும், நிதானத்தையும் பின்பற்றுவது நன்மை தரும். கணவன் மனைவிடையே மகிழ்ச்சி நீடிக்கும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை இருக்கும். சில எதிர்பாராத சூழ்நிலை கடன் வாங்க தூண்டும். ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். சிக்கலான பிரச்னைகளில் கூட நல்ல முடிவு கிடைக்கும். உத்யோகத்தில் நிறைய சாதிக்க முடியும். தொழில், வியாபாரத்தில் லாபம் உண்டு.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, உங்களிடம் உள்ள திறமை அதிகரிக்கும். விருப்பமானவர்களை சந்தித்து உரையாடி மகிழ்ச்சி அடைவீர்கள். காரிய அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் அவசியம். குடும்பத்தில் உங்கள் மதிப்பு உயரும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன பயணங்களில் மிகுந்த கவனம் தேவை. உத்யோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மனதில் இருந்து வந்த மனக்கவலைகள் நீங்கி புதிய உற்சாகம் பிறக்கும். அடுத்தவர்கள் நலனுக்காக பாடுபட வேண்டியிருக்கும். உடல் நலம் சீராகும். குடும்ப விஷயங்களில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம். உறவினர்களிடம் இருந்த மனஸ்தாபம் சரியாகும். கணவன் மனைவிடையே அன்பும், பாசமும் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, குடும்பத்தில் நிலவிய பிரச்சனைகள் வெகுவாக குறையும். புது பொருள் சேர்க்கை உண்டாகும். நெருங்கிய உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். பொது காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். புது நபர்களை நம்பி ஏமாற வேண்டாம். பெரியோர்களின் ஆலோசனை உதவியாக இருக்கும். எதிரிகளின் இன்னல்கள் குறைந்து ஏற்றமான நிலை உண்டாகும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், வியாபாரம் வளர்ச்சி பாதையில் செல்லும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, குடும்பத்தில் பொருளாதார சிக்கல்கள் ஏதும் வர வாய்ப்பு இல்லை. புதிய முயற்சிகள் எதையும் தற்சமயம் வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். உடல் நலம் சீராக இருக்கும். மனதில் குழப்பங்கள் தோன்றி மறையும். உறவினர்கள் சிலர் எதிராக செயல்பட வாய்ப்புண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தினருடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வாகனங்களால் செலவுகள் ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, ஆலய வழிபாடு மன அமைதியை தரும். சொந்த பந்தங்களால் ஒரு சில நன்மைகள் உண்டு. புது நட்பால் நன்மைகள் உண்டு. பயணங்களில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் விருந்தினர் வருகை அதிகரிக்கும். விருந்து மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியும். வெளிநாடு சென்று வரும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் மந்த நிலையில் இருக்கும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை தேடி வரும். குடும்பத்தில் சில முக்கிய முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்படும். உடல் நலம் பலம் பெரும். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் ஏற்படும். நண்பர்கள் வழியில் அனுகூலமான கிடைக்கும். உடன்பிறப்பு வழியில் சில சங்கடங்கள் வர வாய்ப்புண்டு. கடன் பிரச்சனை பாதியாக குறையும். ஆன்மீக சுற்றுலா செல்ல விருப்பம் ஏற்படும். தொழில் வியாபாரம் சிறப்பாக அமையும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, முன் பின் அறிமுகம் இல்லாதவர்களுடன் கவனமாக பழகவும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிய பொருள் வாங்க சிறிது தாமதம் ஏற்படலாம். நீண்ட நாட்களாக நடக்காத காரியம் ஒன்று நடந்து முடியும். உத்தியோகத்தில் நல்ல ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் முக்கிய தருணங்களில் முடிவு எடுப்பதில் சிரமம் இருக்கும். மனதில் குழப்பங்களும், கவலைகளும் இருந்துகொண்டே இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் அன்பு அதிகரிக்கும். பண பிரச்சனை இருந்து கொண்டே இருக்கும். இருப்பினும் வீண் செலவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. தடைபட்டு வந்த திருமண காரியம் சட்டென்று கைக்கூடும். உத்யோகத்தில் பணிகளை நிறைவாக செய்ய முடியும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிபந்தனையற்ற முறையில் ஈரானை சரணடையவைக்க புறப்பட்டு இறுதியில் புரிந்துணர்வுக்குச் சென்ற ட்ரம்ப்!



வீரகத்தி தனபாலசிங்கம்

அமெரிக்காவும் ஈரானும் கடந்த வாரம் கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கை உலகில் மிகவும் கொந்தளிப்பான பிராந்தியங்களில் ஒன்றான மத்திய கிழக்கில் பதற்றத்தைத் தணிப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாக நோக்கப்படுகிறது. பல தசாப்தங்களாக நீடித்த தடை விதிப்புகள், நிழல் யுத்தங்கள், இரகசிய நடவடிக்கைகள் மற்றும் அவ்வப்போது இடம் பெற்ற இராணுவ மோதல்களுக்கு பிறகு அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான சமரசத்துக்கான தற்காலிக ஏற்பாடு ஒன்று கூட முக்கியத்துவம் வாய்ந்த 'இராஜதந்திர' சாதனையாகவே காண்பிக்கப்படுகிறது.

பெப்ரவரி இறுதியில் இருந்து ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்த போரின் விளைவான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கிய உலக நாடுகள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியானும் "இஸ்லாமாபாத் புரிந்துணர்வு உடன்படிக்கை" என்ற தலைப்பிலான 14 அம்ச ஆவணத்தில் கைச்சாத்திட்டதை தொடர்ந்து ஆறுதலடைந்தன.

ஜி 7 நாடுகளின் உச்சிமகாநாட்டைத் தொடர்ந்து பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் பாரிஸில் வேர்செய்ல்ஸ் மாளிகையில் கடந்த புதன்கிழமை அளித்த இரவு விருந்துபசாரத்தின்போது ட்ரம்ப் நேரடியாகவே ஆவணத்தில் கைச்சாத்திட்ட அதேவேளை, ஈரானிய ஜனாதிபதி தெஹ்ரானில் இருந்த வண்ணம் டிஜிட்டல் முறையில் கைச்சாத்திட்டார்.

ஆனால், இந்த உடன்படிக்கையை நிரந்தரமானதாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் சமரசம் செய்துகொள்வதில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இருக்கும் அக்கறையை மாத்திரம் பொறுத்ததவையல்ல. மாறாக, ஈரானை ஒரு நிரந்தர எதிரியாக அமெரிக்கா இனிமேலும் கருதாமல் விடக்கூடிய பிராந்திய ஒழுங்கொன்றை ஏற்றுக்கொள்வதற்கு இஸ்ரேல் தயாராக இருக்கிறதா இல்லையா என்பதையும் அது பொறுத்திருக்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவுகள் சீராவதை இஸ்ரேலை விடவும் வேறு எந்த நாடும் கடுமையாக எதிர்க்கவில்லை. இஸ்ரேலிய அரசாங்கங்கள் தங்களுக்கு இருக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக ஈரானை நோக்கி வந்திருக்கின்றன. அதனால், வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையிலான உறவுகளை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடிய சகல முயற்சிகளையும் இஸ்ரேலிய தலைவர்கள் எதிர்த்துவந்தார்கள். வரலாற்றுப் பதிவுகள் இதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இஸ்ரேலிய தலைவர்கள் தங்களது நாட்டின் பாதுகாப்பை காரணம் காட்டி இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்தினாலும், அவர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பு என்பது பரந்தளவிலான அரசியல் மற்றும் மூலோபாய நோக்கங்களைக் கொண்டிருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து அதன் 60 நாள் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக இரு நாடுகளினதும் தூதுக் குழுக்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிமை சுவிட்சர்லாந்தில் நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்படுவதற்கு காரணமான லெபனான் மோதல்களை இந்த பின்புலத்திலேயே நோக்க வேண்டும்.

மத்திய கிழக்கின் தற்போதைய நிலைவரம் முக்கியமாக மூன்று அடிப்படைகளில் நகருகிறது. டொனாலட் ட்ரம்பும் ஈரானிய ஜனாதிபதியும் கைச்சாத்திட்ட புரிந்து ணர்வு உடன்படிக்கை, சுவிஸ் சந்திப்பின் திடீர் இரத்து, உடன்படிக்கை எதிர்நோக்கும் உடனடிச் சவால்கள் ஆகியவையே அவையாகும்.

போர் மூண்டதையடுத்து. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் உலகளாவிய எரிசக்திச் சந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. உலகின் 20 சதவீத எண்ணெய் விநியோகம் கடந்துசெல்லும் இந்த நீரிணையைத் திறந்துவிட ஈரான் இணங்கியிருக்கிறது .

ஈரான் மீதான தனது கடற்படை முற்றுகையை விலக்கிக்கொள்வதற்கு அமெரிக்கா இணங்கியிருக்கிறது. பரந்தளவிலான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுவதற்கான சாத்தியங்கள் எதிர்கால அணுசக்தி பேச்சுவார்த்தைகளுடன் பிணைக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ஈரான் அதன் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கும் அது தொடர்பான வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கா உடனடி விலக்குகளை வழங்குகிறது.

ஈரான் அதன் சொந்த மண்ணில் வைத்திருக்கும் 440 கிலோகிராம் யூரேனிய இருப்பின் செறிவை சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் குறைப்பதற்கு இணங்கியிருக்கிறது.

ஹோர்முஸ் நீரிணை வழியான நீண்டகால வர்த்தகம் மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பான நிரந்தர உடன்படிக்கையை எட்டுவதற்கு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை 60 நாள் கால அவகாசத்தை வழங்குகிறது.

லெபனான் உட்பட சகல முனைகளிலும் உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும் என்று உடன்படிக்கை வலியுறுத்துகின்ற போதிலும், லெபனானில் இஸ்ரேலுக்கும் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா இயக்கத்துக்கும் இடையில் மோதல்கள் மூண்டதையடுத்து அமெரிக்க - ஈரானிய உயர்மட்டத் தூதுக் குழுக்களுக்கு இடையில் நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

சுவிட்சர்லாந்துக்கு புறப்படுவதற்காக அமெரிக்க துணை ஜனாதிபதி விமானத் தளத்தில் தயாராக இருந்த வேளையிலேயே அவரது பயணம் திடீரென்று நிறுத்தப்பட்டது. லெபனான் மோதல்களைக் காரணம் காட்டி ஈரானியத் தூதுக்குழு அதன் சுவிஸ் பயணத்தை நிறுத்திக்கொண்டது.



அமெரிக்காவின் இராணுவ வல்லமையைக் காட்டுவதற்காகத் தொடக்கப்பட்ட ஒரு நடவடிக்கை அதன் மட்டுப்பாடுகளை (பலவீனங்களை) நிரூபித்த ஒன்றாகவே அமைந்துவிட்டது.

அமெரிக்காவுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை ஜூன் 18 ஆம் திகதி மின்னணு முறையில் கைச்சாத்திடப்பட்டு விட்டதால், அமெரிக்கத் தூதுக்குழுவை சந்திப்பதில் அவசரம் எதுவுமில்லை என்றும் தங்களால் காத்திருக்க முடியும் என்றும் ஈரானிய வெளியுறவு அமைச்சு அறிவித்தது.

லெபனானில் இஸ்ரேல் அதன் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அமெரிக்கா நெருக்குதலைப் பிரயோகிக்க வேண்டும் என்று தெஹ்ரான் வலியுறுத்தியது.

ஹிஸ்புல்லா இயக்கத்துடன் போர் நிறுத்தத்துக்கு இணங்குமாறு இஸ்ரேலை கேட்டுக் கொண்டதாக ட்ரம்ப் வெள்ளிக்கிமை கூறினார். இஸ்ரேல் தற்காலிகமாக தாக்குதல்களை நிறுத்துவதற்கு இணங்கினாலும் கூட அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உடன்படிக்கை இஸ்ரேல் பணயம் வைக்கக்கூடிய அளவுக்கு நொய்தான ஒன்றாக இருக்கிறது என்றே தோன்றுகிறது.

அதேவேளை, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் ஒரு தரப்பாக இருக்கவில்லை என்பதால் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டதுடன் அதன் விதிகள் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் அறிவித்திருக்கிறார். அமெரிக்காவின் உதவியிலும் ஆதரலிலுமே இஸ்ரேல் தங்கியிருக்கின்ற போதிலும், அமெரிக்காவின் நலன்களுக்காக நெதான்யாகுவை ஒத்தழைக்க வைக்க முடியாத ஒரு விசித்திரமான நிலையில் ட்ரம்ப் இருக்கிறார்.

மத்திய கிழக்கின் இன்றைய நிலைவரம் உலக ஒழுங்கை வரையறை செய்வதில் அமெரிக்காவுக்கு இருக்கும் மட்டுப்பாடுகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதும் அதன் அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திறன்களை அழிப்பதும் லெபனானில் ஹிஸ்புல்லா, காசாவில் ஹமாஸ், யேமனில் ஹௌதிகள் போன்ற அரசு சாரா இராணுவ அமைப்புக்களுக்கு ஈரானின் ஆதரவை முடிவுக்கு கொண்டு வருவதுமே தங்கள் இலக்குகள் என்று கூறிக்கொண்டுதான் பெப்ரவரி 28 ஆம் திகதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து போரைத் தொடங்கின.

ஆனால், நூறு நாட்கள் கடந்த நிலையில், ஜூன் 15 ஆம் திகதி அமெரிக்கா ஈரானுடனான போரை நிறுத்துவதற்கும் ஹோர்முஸ் நீரிணை மற்றும் ஓமான் வளைகுடாவில் முற்றுகைகளை விலக்கிக் கொள்வதற்கும் (இவையெல்லாம் போருக்கு முன்னர் இல்லாத இடையூறுகள்) புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறது.

அதேவேளை, இஸ்ரேலின் எதிர்ப்பையும் மீறி ஈரானுடன் புரிந்துணர்வுக்குச் செல்வதற்கு ட்ரம்புக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தம் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் மூலோபாய நிலக்காட்சி எந்தளவுக்கு வியத்தகு முறையில் மாறியிருக்கிறது என்பதை வெளிக்காட்டுகிறது.

மிலேச்சத்தனமான குண்டுவீச்சுக்கள் மூலமாக ஈரானின் உட்கட்டமைப்புக்களுக்கு பாரயளவில் சேதத்தை ஏற்படுத்தியதுடன் முக்கியமான அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் பலரையும் ஆயிரக்கணக்கில் மக்களையும் கொன்றொழித்த போதிலும், அமெரிக்காவினாலும் இஸ்ரேலினாலும் ஈரானை அடிபணிய வைக்க முடியவில்லை.

ஈரானுடனான பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலையும் ஈடுபடுத்தினால் தன்னால் இந்த போரில் இருந்து வெளியேற முடியாது என்பதை உணர்ந்த ட்ரம்ப் ஈரானை நிபந்தனையற்ற முறையில் சரணடைய வைப்பதைத் தவிர வேறு பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து இறங்கிவர வேண்டியேற்பட்டது. தனது நகர்வுகளுக்கு (எதிரியான ஈரானிடமிருந்து அல்ல) தனது நண்பனான இஸ்ரேலிய பிரதமரிடமிருந்து வரக்கூடிய இடையூறுகளை எவ்வாறு சமாளிப்பது என்பதே ட்ரம்புக்கு இப்போது பிரச்சினையாக இருக்கிறது.

இறுதி உடன்படிக்கையை நோக்கிய பேச்சுவார்த்தைகளுக்கான 60 நாட்கள் கால அவகாசத்தின்போது குறிப்பாக, அணுசக்தி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடிப்பதை தடுப்பதே ட்ரம்புக்கு இருக்கக்கூடிய முக்கியமான சவாலாகும்.

ஈரானிய அணுசக்தி பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வைக் கண்டுவிட முடியும் என்ற இஸ்ரேலின் கதையை நம்பியதுதான் அமெரிக்க ஜனாதிபதி செய்த மிகப்பெரிய மூலோபாயத் தவறு. ஈரானை அவர் குறைத்து மதிப்பிட்டுவிட்டார். புரிந்துணர்வு உடன்படிக்கையும் போர் நிறுத்தமும் வரவேற்கத்தக்கவையே. ஆனால், ஒரு தற்காலிக இடைநிறுத்தம் எந்த விதத்திலும் எந்தத் தரப்புக்கும் வெற்றியாகி விடாது.

தன்னிச்சையாகத் தொடங்கி தோல்வியடைந்த போரை, ஒரு இராஜதந்திர வெற்றியாகக் காட்டி உண்மையை மறைக்க ட்ரம்ப் முயற்சிக்கிறார். அவர் அறிவித்த இலக்குகளை அடையத்தவறிய, ஈரானில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய, லெபனானைச் சீர்குலைத்த, எரிசக்திச் சந்தைகளில் அதிர்வுகளை ஏற்படுத்தி உலகநாடுகள் பலவற்றில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய ஒரு சட்டவிரோதமான - தன்னிச்சையான போருக்குப் பிறகு ட்ரம்பினால் ஒரு தற்காலிக இடைநிறுத்தத்தையே விலைக்கு வாங்கக் கூடியதாக இருந்திருக்கிறது.

அமெரிக்காவின் இராணுவ வல்லமையைக் காட்டுவதற்காகத் தொடக்கப்பட்ட ஒரு நடவடிக்கை அதன் மட்டுப்பாடுகளை (பலவீனங்களை) நிரூபித்த ஒன்றாகவே அமைந்துவிட்டது.

இறுதியாக, கடந்த புதன்கிழமை சென்னை 'தி இந்து' ஆங்கிலப் பத்திரிகை எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்திருக்கும் சுவாரஸ்யமான கருத்தொன்றை இங்கு. குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்;

" ஹென்றி கீசிங்கர் கூறியதைப் போன்று கெரில்லாப் போராளி தோற்காமல் இருந்தால் அவன் வெற்றி பெற்றதாகவே அர்த்தம். மிகவும் பலம் பொருந்திய வல்லரசான அமெரிக்கா அதன் இலக்குகளை அடையத் தவறியதன் மூலம் போரில் தோற்றது ஆனால், தோற்காமல் இருந்ததன் மூலமே ஈரான் வெற்றி பெற்றிருக்கிறது." ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலாநிதி தேவநேசன் நேசையா:

# நேர்மைக்காக பல விலைகளைக் கொடுத்த பெருமகன்!




கலாநிதி
ஜெகான் பெரேரா


சில நாட்களுக்கு முன்பு கலாநிதி தேவநேசன் நேசையா காலமான செய்தி, கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான நினைவுகளை மீண்டும் என் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது. 2002 ஆம் ஆண்டு நடந்த எனது திருமணத்தில், சாட்சிப் பதிவேட்டில் தேவநேசன் கையெழுத்திட்டார். அது நம்பிக்கைகள் நிறைந்த ஒரு வருடமாகும். இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம், கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக நாட்டை உலுக்கி வந்த போரிலிருந்து ஒரு தற்காலிக நிம்மதியைக் கொண்டு வந்திருந்தது. அமைதிக்கான சாத்தியக்கூறுகள் உண்மையாகவே தென்பட்டன.

அந்தத் தருணத்தில் தேவநேசன் எனது திருமணத்தில் முன்னிலை வகித்தது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் அவரது ஒட்டுமொத்த வாழ்க்கையும் சமூகப் பிரிவினைகளுக்கு இடையே பாலங்களை அமைப்பதற்கும் மோதல்களுக்கு பகுத்தறிவு மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான தீர்வுகளைத் தேடுவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர் ஒரு நண்பராக, வழிகாட்டியாக, ஆசானாகத் திகழ்ந்தவர். அவரது வாழ்க்கை, இன்றைய இலங்கைக்கும், ஏன் இந்த உலகத்திற்கும் அவசியமாகத் தேவைப்படும் விழுமியங்களை (மதிப்புகளை) பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

கலாநிதி நேசையாவின் வாழ்க்கையை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, இலங்கையர்களாகிய நம்மை ஒன்றிணைக்கும் சக்திகள், நம்மைப் பிரிக்கும் சக்திகளை விட மிகவும் வலிமையானவை என்பதையும், மனித அன்பின் பிணைப்புகள் இனம், வரலாறு மற்றும் அரசியல் போன்ற ஆழமான பிரிவினைகளைக் கடந்து நிற்கக் கூடியவை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நான் அவரை முதன் முதலில் 1984 ஆம் ஆண்டில் சந்தித்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'சாட்டர்டே ரிவியூ" இதழில் எனது முதல் கட்டுரை அப்போதுதான் பிரசுரமாகியிருந்தது. அதன் ஆசிரியர் காமினி நவரத்ன ஒரு சிங்களவர். இன மோதல்களின் இருண்ட காலகட்டத்திலும்கூட, சமூகங்களுக்கு இடையிலான பிணைப்புகள் வலுவாக இருந்தன என்பதற்கு இது ஒரு சிறந்த நினைவூட்டலாகும். 1983 ஜூலையில் நடந்த தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை நான் நேரில் எதிர்கொண்ட அனுபவங்களின் அடிப்படையிலேயே அக்கட்டுரையை எழுதியிருந்தேன்.


அந்தக் காலகட்டத்தில், கலாநிதி நேசையா யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்தார். தென்னிலங்கையில் நடந்த வன்முறைகளில் இருந்து தப்பியோடிய பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள், அவர்களைப் பாதுகாக்கத் தவறிய அரசாங்கத்தால் வட பகுதிக்கு கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஒரு நிகழ்வில் என்னிடம் வந்த அவர், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, நான் எழுதிய கட்டுரை தனக்கு மிகவும் பிடித்திருந்தது என்று கூறினார். மேலும், தான் விரைவில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் கென்னடி அரசறிவியல் பள்ளி யில் படிப்பைத் தொடரச் செல்லவிருப்பதாகவும் அங்கு நாம் சந்திக்கலாம் என்றும் கூறினார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில், கலாநிதி தேவநேசனும் அவரது மனைவி அனிதாவும் என்னை தங்களின் குடும்பத்தில் ஒருவனாகவே ஏற்றுக் கொண்டனர். வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை நான் அவர்களின் வீட்டிற்குச் செல்வது வழக்கம். அனிதா சமைத்துத் தரும் உணவை உண்பதற்காக மட்டுமல்லாமல், தேவநேசனுடன் பல்வேறு விடயங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் நான் அங்கு சென்றேன். நாங்கள் எழுதிய கல்விசார் கட்டுரைகள் மற்றும் செய்தித்தாள் பதிவுகள் பற்றி பல மணிநேரம் விவாதிப்போம். பிற்காலத்தில் அனிதா மதக் கோட்பாடுகளில் கலாநிதி பட்டம் பெற்றதுடன், தேசிய சமாதானப் பேரவை உள்ளிட்ட பல சிவில் அமைப்புகளின் நிர்வாகக் குழுக்களிலும் பணியாற்றினார்.

1992 ஆம் ஆண்டில் நாங்கள் இருவரும் இலங்கைக்குத் திரும்பிப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, தேவநேசனின் தந்தையான கே. நேசையாவின் 80 வது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு என்னையும் வருமாறு அழைத்தார். பேராசிரியர் நேசையா என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் அவர், ஒரு சிறந்த கல்வியாளர் ஆவார். மூத்த நேசையா யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் முன்னணி உறுப்பினராக இருந்தவர். இந்த அசாதாரண இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து முழுமையான சுதந்திரம், தேசிய ஒற்றுமை மற்றும் சாதி, மத அடையாளங்களின் அடிப்படையிலான சமூக அநீதிகளை ஒழிப்பது ஆகிய கொள்கைகளுக்காகப் போராடியது.

சுதந்திரத்திற்குப் பிறகு பெரும்பான்மைவாதம் ஆதிக்கம் செலுத்துமோ என்று பலர் அஞ்சிய ஒரு காலகட்டத்தில், வாலிபர் காங்கிரஸின் தலைவர்கள் அதற்கு மாறாக, ஒரு கூட்டு இலங்கை எதிர்காலத்தின் மீது தங்களது நம்பிக்கையை வைத்திருந்தனர். வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது தனித்துவமான அடையாளங்களைப் பாதுகாத்துக் கொண்டே, ஒரு பொதுவான தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று அவர்கள் நம்பினர். தேவநேசனும் அதையே நம்பினார். இந்த தொலைநோக்குப் பார்வை இன்றும் பொருத்த மானதாக உள்ளது. இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றின் சோகம் என்னவென்றால், இங்கு பன்முகத்தன்மை இருப்பது அல்ல. பன்முகத்தன்மை என்பது எல்லாச் சமூகங்களிலும் இருப்பதுதான். ஆனால், குடும்பம், விருந்தோம்பல், பெரியவர்களை மதித்தல் மற்றும் பிறரிடம் கருணை காட்டுதல் போன்ற பொதுவான விழுமியங்களை நாம் பகிர்ந்து கொண்ட போதிலும், பன்முகத்தன்மையை ஒரு பயத்தின் ஆதாரமாக நாம் மாற அனுமதித்துவிட்டதுதான் பெரும் சோகம்.



1992 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது, ரஹீம் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதிநிதிகளை நாங்கள் சந்தித்தோம். அப்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்ற விவாதத்திற்குரிய விடயம் பற்றிப் பேச்சு எழுந்தது. அரசியல் எதிர்ப்புகள் காரணமாக மாகாண இணைப்பு சாத்தியமில்லை என்றால், அதற்குப் பதிலாக மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களைக் கோருவது மிகவும் பகுத்தறிவுள்ள ஒன்றாக இருக்கும் என்று கலாநிதி நேசையா வாதிட்டார். ரஹீம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும், தேவநேசன் எப்போதும் நீதியையும் சகவாழ்வையும் அடைவதற்கான நடைமுறை வழிகளைக் கண்டறிவதிலேயே ஆர்வம் காட்டினார். அதுவே அவரது தனித்துவமான குணமாக இருந்தது.

கலாநிதி நேசையா மோதல்கள் மற்றும் உத்திகள் பற்றிய ஒரு சிறந்த ஆய்வாளர். மோதல்கள் மற்றும் ஒத்துழைப்பு பற்றிய அவரது முன்னோடி பணிக்காக பிற்காலத்தில் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் தோமஸ் ஷெல்லிங்கின் கீழ் அவர் கலாநிதிப் பட்ட மாணவராக இருந்தார். ஷெல்லிங்கின் முக்கியக் கோட்பாடு என்னவென்றால், தீவிரமான மோதல்களுக்கு மத்தியிலும், எதிராளிகள் இருவருக்கும் பொதுவான சில நலன்கள் எப்போதும் இருக்கும் என்பதுதான். ஒருவருக்கொருவர் போராடும் எதிரிகள்கூட தங்களுக்குத் தேவையான இறுதி முடிவைப் பெற ஒருவரிலொருவர் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

சவால் என்னவென்றால், அந்தப் பொதுவான நலன்களைக் கண்டறிந்து, அதன் மூலம் உறவை வளர்ப்பதாகும். மோதல் என்பது வெறும் எதிரிகளுக்கு இடையிலான சண்டை மட்டுமல்ல. அது ஒன்றாக வாழ்வதற்கான (சகவாழ்வுக்கான) வழிகளைத் தேடும் ஒரு முயற்சியுமாகும். மாணவர்கள் மற்றும் சமாதானப் பணியாளர்கள் என்ற ரீதியில், நாங்கள் இருவரும் இணைந்து அந்தக் கோட்பாடுகளை இலங்கையின் சூழலுக்குப் பயன்படுத்தி, இங்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவும், அந்தப் புரிதலை இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முயன்றோம்.

கலாநிதி நேசையா எதற்கும் அஞ்சாமல், அதிகாரத்தில் உள்ளவர்களிடமும் உண்மையை நேருக்கு நேராகப் பேசக்கூடியவர். அவர் தர்க்கம், பகுத்தறிவு மற்றும் கொள்கைப்பிடிப்பு உள்ள ஒரு மனிதர். அவரது நேர்மைக்கு அவர் பல விலைகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. அரசியல்வாதிகளின் பகுத்தறிவற்ற அல்லது ஊழல் கோரிக்கைகளுக்குப் பணிய மறுத்ததால், அவரது பொதுச் சேவை வாழ்க்கை பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்தது. அரசியல் கோரிக்கைகளுக்கு இணங்காததால், எந்தவொரு குறிப்பிட்ட பொறுப்புகளும் வழங்கப்படாமல், நிர்வாக ரீதியாக "ஒதுக்கப்பட்ட நிலை" என்று அழைக்கப்படும் ஒரு முட்டுக்கட்டை நிலைக்கு அவர் தள்ளப்பட்ட காலங்களும் உண்டு.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற ஹூல் குடும்பத்தைச் சேர்ந்த அவரது உறவினர்களைப் போன்றே, தேவனேசனும் தனது கொள்கைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில், அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போதைய அரசாங்கத்தைக் கலைத்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தனக்கு வழங்கப்பட்ட நாட்டின் உயரிய சிவில் விருதான "தேஷமான்ய" விருதை அவர் திருப்பிக் கொடுத்தார். (பின்னர் ஜனாதிபதியின் அந்த நடவடிக்கை அரசியலமைப்பிற்கு முரணானது என்று உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது). அவரது அர்ப்பணிப்பு தனது சொந்த முன்னேற்றத்திற்காக அல்ல, தான் எது சரி என்று நம்பினாரோ அதற்காகவே இருந்தது.

அவர் தனக்குக் கூறிய ஒரு கதையை எனது மனைவி சுமது நினைவு கூர்ந்தார். ஒருமுறை உத்தியோகபூர்வ பயணத்தில் இருந்தபோது, ஒரு உடும்பு கட்டப்பட்டு, இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்படுவதை தேவநேசன் கண்டார். அந்த உயிரினத்தின் வேதனை அவரை ஆழமாகப் பாதித்தது. அதன் கண்களில் கண்ணீரைக் கண்டதாகக் கூறிய அவர், அது தனது மனதில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய தருணம் என்று விவரித்தார். அன்றிலிருந்து அவர் அசைவ உணவு உண்பதை முற்றிலுமாக கைவிட்டார்.


இந்த கதை, பைபிளில் வரும் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் புனித பவுல் மனம் மாறிய கதையையும், "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்ற பௌத்த போதனையையும் நினைவூட்டுகிறது. ஆனால், இதன் ஆழமான முக்கியத்துவம் மத ஒப்பீடுகளில் இல்லை, அது அவரிடம் இருந்த மனிதாபிமான அனுதாபத்தின் விழிப்புணர்வைக் காட்டுகிறது.


இதுவே கலாநிதி தேவநேசன் நேசையாவின் உலகப் பார்வையின் சாராம்சமாக இருந்தது. சமூகம் இனம், மதம், சாதி அல்லது பாலினம் மூலம் திணிக்கும் தப்பெண்ணங்கள் அவரிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சிலருக்குச் சலுகைகளை வழங்கி, மற்றவர்களைப் புறக்கணிப்பதற்காக மனிதர்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளே அவை என்று அவர் கருதினார். இத்தகைய விழுமியங்கள்தான் அவரை ஒரு அசாதாரண மனிதராக மாற்றின.

கலாநிதி நேசையா அந்தப் புரிதலின்படியே வாழ்ந்து காட்டினார். மோதல்களுக்கு மத்தியிலும் நேர்மையுடன் வாழ முடியும் என்பதை அவர் நிரூபித்தார். பகுத்தறிவும் கருணையும் ஒன்றிற்கு ஒன்று எதிரானவை அல்ல, அவை இரண்டும் இணை பிரியாத பங்காளிகள் என்பதையும், நமது பொதுவான இலங்கைத் தீவு இல்லத்தில் வாழும் இலங்கையர்களாகிய நம்மை ஒன்றிணைப்பது, நம்மைப் பிரிப்பதை விட எப்போதும் பெரியது என்பதையும் அவர் நமக்கு நினைவூட்டினார். அதற்கு ஏற்பவே நாம் நமது நிறுவனங்களை உருவாக்க வேண்டும். அவர் எனது நண்பராக இருந்தார் என்பதில் நான் பெருமைப் படுகிறேன். அவர் எனது வழிகாட்டியாக இருந்தார் என்பதில் நான் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகழப்படும் செம்மணிமயான நிலப்பகுதி இனப்படுகொலையின் நினைவாகவேண்டும்!




பனங்காட்டான்

“தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் இப்போது செம்மணியை மறந்துவிட்டனர். அண்மையில் இந்தப் பக்கம் அவர்கள் சென்றதாகக்கூட கதையில்லை. தங்கள் உள்வீட்டுப் பிரச்சனையையே தீர்க்கமுடியாது ஊடகங்கள் ஊடாக அறிக்கைவிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு செம்மணிபக்கம் போக நேரம் இல்லைப் போலும்.”

மேலுள்ளவரிகள் கடந்தவாரம் எழுதப்பட்ட இப்பத்தியில் இடம்பெற்றிருந்தது. இலங்கையில் இதுவரை மீட்கப்பட்ட மனிதப் புதைகுழி என்புக்கூடுகளில் செம்மணி என அழைக்கப்படும் அரியாலை சித்துப்பாத்தி மயானமே மிகக்கூடுதலானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து புதைகுழிகள் அகழப்படும் பணிதொடர்கிறது. இன்னமும் எத்தனை நூறு என்புக்கூடுகள் மீட்கப்படுமோ என்ற அச்சத்துடன் இப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தம் கடமையை மேற்கொள்கின்றனர்.

ஆனால்,தமிழர் தாயகத்தில் தேர்தல்களில் போட்டியிட்ட, வெற்றிபெற்ற தமிழ்த் தேசியவாதிகள் இதனையிட்டு அக்கறையில்லாதவர்களாக காணப்பட்டார்கள் என்ற ஆதங்கத்தில் கடந்தவாரம் அந்தவரிகள் எழுதப்பட்டது. இது வெளியான 24 மணிநேரத்துக்குள் தமிழரசுக் கட்சியின் பதில்செயலாளர் சுமந்திரன் ஓர் அறிக்கையை ஊடகங்களில் வெளியிட்டிருந்தார்.

‘செம்மணிபுதை குழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் என்புத்தொகுதிகள் நிபுணத்துவம் வாய்ந்த பிரபல பல்கலைக்கழகங்களுக்கு அல்லது பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பப்படவேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இதுவரை அனுப்பப்படவில்லை. இவைகள் அடையாளம் காணப்பட்டு அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும்” என்று இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அடுத்த 24 மணிநேரத்துள் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கருத்தும் ஊடகங்களில் வெளியானது. இலங்கையில் திட்டமிட்டவகையில் இனப்படுகொலை இடம்பெற்றதென்பதற்கு அசைக்கமுடியாத சாட்சி செம்மணி புதைகுழிகள் என்று இவர் தமது கருத்தை வெளியிட்டிருந்தார்.

இருவரதும் அறிக்கைகள் முறையே கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் வெளியானதையடுத்து அநுரகுமர அரசின் நீதிஅமைச்சர் ஹர்சனநாணயக்கார தமது அதிகாரிகள் மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் சகிதம் செம்மணிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

செம்மணி அகழ்வுப் பணிக்குத் தேவையான நிதியை தமதுஅரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கும் நிதிவழங்கத் தயாராக உள்ளதாகவும், நீதியான விசாரணை நடக்க தமது அரசு ஆதரவாக இருக்குமென்றும் உறுதியளித்தார்.

**எரியூட்டப்பட்ட யாழ்ப்பாணத்து நூலகத்துக்கு நட்டஈடு வழங்கமுன்வந்த இலங்கை அரசு, எரிந்த பகுதியை முழுமையாக திருத்தியமைக்க வேண்டுமென நிர்ப்பந்தித்ததற்கான முக்கியகாரணம் எரிக்கப்பட்ட அடையாளத்தை இல்லாமற் செய்வதற்காகவே. அதுபோன்ற நிலைமை செம்மணிமயான நிலப்பகுதிக்கும் ஏற்பட இடமளிக்கக்கூடாது. தமிழின படுகொலையின் நினைவழியாச் சின்னமாக செம்மணி நின்று நிலைக்கவேண்டும்.**

வழமையாக சகல அரசியல்வாதிகளும் குறிப்பிடுவதுபோன்று முன்னைய அரசாங்கங்கள் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டதாகவும், அதுபோன்று தமது அரசு ஏமாற்றாது என்றும் சொன்னார். (இதற்கான பதில் பெறவேண்டுமெனில் இன்னும் சில வருடங்கள் தமிழர்கள் காத்திருக்கவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியாததல்ல).

குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுமென்றும் செம்மணியில் நின்று கருத்துரைத்த அமைச்சர், அடுத்து தெரிவித்த ஒரு முக்கியமான கருத்து இவரது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இவரே சிதறடித்துவிட்டதாக அமைந்திருந்தது.

‘இராணுவத்தினர் படுகொலைகளில் ஈடுபட்டிருந்தால் அதற்கானஆதாரங்களை முன்வைத்தால் நிச்சயமாக இராணுவத்தினருக்கு எதிராகவும் நாம் நடவடிக்கை எடுப்போம்’ என்பதே அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இறக்கிவிடும் கூற்றாகும். நீதியாக விசாரணைகளை நடத்தி நீதிக்குப் புறம்பாக செயற்பட்டவர்களை அவர்கள் எவராக இருந்தாலும் நீதிக்கு முன்னால் நிறுத்தி நீதி வழங்கவேண்டிய நீதி அமைச்சரா இப்படி சொன்னார்?

செம்மணி மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவலை முதலில் வெளியிட்டவர் யார்? ஏற்கனவே இராணுவப் படுகொலைகள் சம்பந்தமாக சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஒரு இராணுவச் சிப்பாயே இதனை வெளிப்படுத்தினார். பல நூறு மனித எச்சங்கள் இப்புதைகுழிக்குள் உள்ளதாக அ[illegible] இந்த நிலத்தைதொடர்ந்து அகழ்வதற்கும், எலும்புக் கூடுகள் நூற்றுக்கணக்கில் வெளிவருவதற்கும் காரணமாக இருந்தது. இதற்குப் பின்னரும் இதுவிடயத் தில் இராணுவம் ஈடுபட்டிருக்குமா என்ற சந்தேகம் நீதி அமைச்சருக்கு ஏன் எழவேண்டும்?




இவ்விடத்தில் தான் இவர் பற்றிய சகல பின்னணிகளையும் சற்று ஆழமாக தேடிப் பார்க்கவைக்கிறது. இவரது குடும்பப் பின்னணியையும் நோக்கவேண்டியுள்ளது. அரசியலுக்கு வருவதற்கு முன்னர் ஐந்து சிங்களத் திரைப்படங்களில் நடித்த பிரபலநடிகர் இவர். (கிட்டத் தட்ட மகிந்தராஜபக்ச போல). அமைச்சரின் தந்தையார் ஜசபா லித நாணயக்கார சிங்கள சினிமா - நாடக தயாரிப்பாளர், கதை வச னகர்த்தா, கவிஞர் எனபுகழ் பெற் றவர். அமைச்சர் ஹர்சன நாணயக்கார ஒரு சட்டத்தரணியும், அரசியல்வாதியு மாவார்.

இலங்கையில் புகழ் பெற்ற இடதுசாரி அரசியல்வாதியான வாசுதேவநாணயக்கார இவரது மாமனார். மற்றொரு மாமனாரான ஹேமகுமார நாணயக்கார அமைச்சராகவும், மேல் மாகாண கவர்னராகவும் பதவி வகித்தவர். ஹர்சன நாணயக்கார நீதி அமைச்சராக மட்டுமன்றி தேசிய நல்லிணக்க அமைச்சராகவும் பதவிவகிப்பது முக்கியமானது.

நீதித்துறை பற்றியும், அரசியல்வாதிகள் பற்றியும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவர் தெரிவித்த கருத்துகள் சற்று விசித்திரமானவை. நீதிபதிகள் சுலபமாக சம்பளம் பெறுவதற்கும், சட்டத்தரணிகள் பணம் உழைப்பதற்குமான இடமாக நீதிமன்றங்கள் இருக்கக்கூடாது என்ற தமது கருத்தை ஒருதடவை வெளிப்படுத்திய இவர், அரசியல் பற்றிக் குறிப்பிடுகையில், அரசியல்வாதிகள் அரசியலமைப்பை கழிவறைக் கடதாசிபோல பயன்படுத்துகின்றனர் என்று கூறி தமது சகபாடிகளை தம்பக்கம் திரும்பிப் பார்க்கவைத்தவர்.

இ[illegible]ணியில் செம்மணி புதைகுழி விடயத்தில் இராணுவத்தின் தொடர்புபற்றி ஐயத்துடன் இவர் தெரிவித்த கருத்து சர்ச்சைக்குரியது. எவ்வகையிலாவது இராணுவத்தினரை செம்மணி விடயத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இவர் மனதில் நிலையுற்றது போல தெரிய வைக்கிறது. கொடூரமான யுத்த காலத்தில் செம்மணி பிரதேசத்தில் அமைந்திருந்த படையினரின் முகாம்கள், அவர்களின் செயற்பாடுகள், அக்காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்கள் போன்றவர்களின் விபரங்களைஅரசாங்கத்தால் கண்டுபிடிக்க முடியாது என்று கூற முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களே அந்தக் கொலைகாரர்களை கண்டுபிடிக்கவேண்டுமென நீதி அமைச்சராக இருப்பவர் வேண்டுகோள் விடுப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும்?

புதைகுழிக்குள்ளிருந்து நாளாந்தம் என்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. இராணுவம் கொலைகளில் ஈடுபட்டதாக இன்னொரு இராணுவச் சிப்பாயே வாக்குமூலம் அளித்துள்ளார். இதன் பின்னரும் இவ்விடயத்தில் எதற்காக நீதி அமைச்சருக்கு சந்தேகம் வரவேண்டும்? செம்மணி மயானம் அமைந்திருக்கும் நிலப்பரப்பு நல்லூர் பிரதேசசபைக்கு சொந்தமானது. இனப்படுகொலையின் நினைவழியாச் சின்னமாக அமைந்திருக்கும் இப்பிரதேசத்தை பாதுகாப்புப் பிரதேசமாக மாற்றி ஓர் அடையாளச் சின்னமாக பேணிப் பாதுகாக்கப்போவது காலத்தின் தேவையென்று நல்லூர் பிரதேசசபையின் அக்கிராசனர் அறிவித்திருப்பது முக்கியமான விடயம்.

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை திட்டமிட்டு அரசசார்பு விசமிகள் எரித்த பின்னர், எரியும் பகுதியை நினைவுச் சின்னமாக பேணியவாறு நூலகத்தின் மேற்குப்புறத்தில் புதிய நூலகத்தை அமைக்கவே நூலக நிர்வாகம் ஏற்பாடு செய்தது. ஆனால், அந்த நினைவுச் சின்னம் அங்கு இருக்கக்கூடாது என்று விரும்பிய இலங்கை அரசு, நட்டஈடு வழங்குவதானால் எரியுண்ட பகுதியையே புனரமைக்கவேண்டுமென்று அதனைச் செயற்படுத்தியது, நினைவுச்சின்னமாக எரியுண்ட பகுதியை இல்லாமற் செய்வதற்கே.

அதுபோன்று செம்மணி மயான நினைவிடத்தை இன அழிப்பின் அடையாளமாக இல்லாமற் செய்வதற்கு இலங்கை அரசும் இராணுவமும் சகல மேலாதிக்க முயற்சிகளையும் மேற்கொள்ளும். அதனையும் மீறிசெம்மணியை நினைவழியாச் சின்னமாக பேணவேண்டியது தமிழர் தேசத்தின் காலக் கடமை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ஈழத் தமிழர் அரசியல் - அரசியல்வாதிகளும் மக்களும்






-யதீந்திரா

> பேரழிவு ஒன்றை சந்தித்து, நிலை குலைந்த பின்னரும் கூட, எங்களால் ஆரோக்கியமாக சிந்திக்கவோ, எங்களின் பிரதிநிதிகளை சரியாக தெரிவு செய்யவோ முடியாமல் இருக்கின்றது என்றால், அதன் பொருள் என்ன? இப்போது பிரச்சினை அரசியல்வாதிகள் அல்ல - அவ்வாறான அரசியல்வாதிகளை தெரிவு செய்யும் மக்கள்தான்.


***யாழ்ப்பாணத்தில்*** இடம்பெறும் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்கள் என்றாலே சுவார்சியமும் சிரிப்பும் என்றாகிவிட்டது. இது பற்றி பேசிக் கொண்டிருந்த போது, ஒரு புலம்பெயர் நண்பர் கூறினார், ஆற்றல் உள்ளவர்கள் எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறி விட்டனர். அரசியலை முன்னெடுக்க அங்கு ஆட்கள் இல்லாமல் போய்விட்டது - அதனால்தான் இந்த நிலைமை. இப்போதேல்லாம் கோபப்படாமல் பேசுவது எவ்வாறு என்றுதான் இந்தக் கட்டுரையாளர் பயற்சிகளை மேற் கொண்டுவருகின்றார். கோபப்பட்டு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை என்பது வேறு விடயம். அவருக்கான எனது பதில் இப்படியிருந்த - புலம் பெயர் சூழலில் இடம்பெறும் அரசியல் உரையாடல்களையும் செயற்பாடுகளையும் உற்றுநோக்கினால் அப்படித் தெரியவில்லையே - அங்கும் இங்குபோல் சந்திக்குச் சந்தி, சண்டையிடும் குழுக்களும், ஆட்களும்தானே தென்படுகின்றனர். மேற்குலகின் முன்னேறிய ஜனநாயகச் சூழலில் கூட, நாகரீகமான தமிழ் அரசியல் கலாசாரத்தை காண முடியவில்லையே! ஆகக் குறைந்தது நாகரீகமான அரசியல் உரையாடல்களைக் கூட காண முடியவில்லையே! இப்போதும் பழைய துரோகி - தியாகிக் கதைகள் தானே அங்கும் தலைவிரித்தாடுகின்றது. எவ்வாறு, யாழ்ப்பாண அபிவிருத்திக் குழுக் கூட்டங்களின் கூத்துக்களை பார்த்து, படித்தவர்கள் என்போர், சிவில் சமூகத்தினர் என்போர், பல்கலைக்கழக சமூகம் என்போர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனரோ - அப்படித் தானே வெளிநாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றது. அப்படிப் பார்த்தால் அங்கும் புத்திசாலித்தனத்தை காண முடியவில்லையே! இது அரசியல்ரீதியிலான அவதானம் மட்டும்தான்.

பொதுவாக அனைத்துக்கும் அரசியல்வாதிகளை குற்றம் சாட்டுவதுதான் நமது பழக்கம். உந்த அரசியல்வாதிக்கு மண்டையில ஒன்றும் இல்ல போல - உந்த அரசியல்வாதிக்கு ஒழுக்காய் பேசத் தெரியவில்லையே! - இப்படிப் பலரும் பேசிக்கொள்வதை நமது அன்றாட வாழ்வில் அடிக்கடி காண முடியும். ஆனால் நாம், நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி ஒன்றுண்டு அல்லவா - அதாவது, இப்படியானவர்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தவர்கள் யார்? அவர்களுடைய அறிவு நிலை என்ன?

சில தினங்களுக்கு முன்னர் ஒரு அரசியல் கட்சித் தலைவருடன் பேசிக் கொண்டிருந்த போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர், காலம் சென்ற, சௌமியமூர்த்தி தொண்டமான் தன்னிடம் கூறிய ஒரு விடயத்தை பகிர்ந்து கொண்டார். எனது மக்கள் பெரிதாக புத்திசாலிகள் இல்லை ஆனால் உங்களுடைய மக்கள் அப்படியல்ல - யாழ்ப்பாண மக்கள் படித்தவர்கள் - புத்திசாலிகள் ஆனால் நான் யோசிப்பதுண்டு - இப்படியான புத்திசாலிகள் ஏன் இப்படியிருக்கின்றனர் - எதனையும் அடையும் நோக்கில் அவர்களால் செயலாற்ற முடியவில்லையே! இது பற்றி முன்னரும் சில சந்தர்ப்பங்களில் இந்தக் கட்டுரையாளர் எழுதியிருக்கின்றார். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது பேசியுமிருக்கின்றார்.

தமிழ் சமூகத்தின், முக்கியமாக யாழ்ப்பாண சமூகத்தின் புத்திசாலித்தனம் என்பது அடிப்படையில் தனிப்பட்ட நலன்களை வெற்றிகொள்வது பற்றியது மட்டும்தான். அது எப்போதும் கூட்டு நலன்கள் பற்றியதல்ல. இதன் காரணமாகத்தான், இத்தனை இயக்கங்கள், இத்தனை கட்சிகள், இத்தனை அப்புக்காத்துக்கள் (சட்டத்தரணிகள்) என்றெல்லாம் தம்பட்டம் அடித்தும், இறுதியில் உள்ளதையும் கெடுத்தான் ஆண்டி என்னும் நிலைக்கே, இன்று தமிழினம் வந்து சேர்ந்திருக்கின்றது. இதில் பெருமைப்பட்டுக் கொள்ள என்ன இருக்கின்றது?

இப்போது நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி - அரசியல்வாதிகள் பற்றியது அல்ல - மாறாக மக்கள் என்போர் பற்றியது. இந்திய பிரதமர் நேருவின் காலத்தில்,



அவருடைய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தவர் கிருஸ்ண மேனன் ஆவார். மேனன் அன்றைய காலத்தின் புகழ்பெற்ற அறிவுஜீவி. அவர் இந்தியா தொடர்பில் இப்படி கூறியிருக்கின்றார் - அதாவது, இந்தியா என்பது வறுமையான நாடு அல்ல - ஆனால் வறுமையான மக்களின் நாடு. ஒரு நாடு வறுமையில் இருக்கின் றது என்பதற்கும், வறுமையான மக்களைக் கொண்ட நாடு என்பதற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. அதாவது ஒரு மக்கள் கூட்டம் எப்படி யிருக்கின்றதோ அதற்கேற்றப்படிதான் அந்த நாடு இருக்கும் - அந்த நாட்டின் தலைவர்கள் இருப்பார்கள் - நாட்டின் தலைவர்கள் எப்படியிருப்பார்களோ அப்படித்தான் அந்த நாட்டின் ஆட்சி இருக்கும்.

ஈழத் தமிழர்களின் அரசியல் புரிதலின் அளவுதான், அவர்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்களின் அறிவு நிலையினதும் ஆற்றலினதும் அளவாகும். இன்று வடக்கு கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆற்றலையும் அறிவையும், செயற்திறனையும் நோக்கினால், தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வும், அரசியல் புரிதலும் எத்தகையது என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். வடக்கில் கஜேந்திரகுமாரையும் கிழக்கில் சாணக்கியனையும் தவிர்த்துப்பார்த்தால், பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டிய இடம் பிரதேச சபைகளாகும்.

இலங்கை தமிழரசு கட்சி 1949இல் உருவாக்கப்பட்டது. 78 ஆண்டுகள் கடந்துவிட்டது. விடுதலை - தீர்வு என்பதுதான் இத்தனை ஆண்டுகளினதும் கோசம். ஆனால் நடந்தது என்ன? ஒரு மக்கள் கூட்டம் போரடிக் கொண்டிருக்கவே முடியாது. போராட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலின் விளைவாக இடம்பெறுவதுண்டு. அது மனித குல வரலாறு முழுவதும் இடம்பெற்ற விடயம்தான் ஆனால் பேராட்டங்களின் இலக்கு போராடிக் கொண்டிருப்பதே அல்ல - மாறாக போராட்டத்தின் விளைவைக் கொண்டு, பெறக் கூடியதை உச்சபட்சமாக பெற்றுக் கொண்டு, முன்னோக்கி பயணிப்பது. சமூக பொருளாதார ரீதியாக முன்னேறுவது. உலக வளர்ச்சியோடு சமாந்தரமாக பயணிப்பதற்கான ஆற்றலை பெருக்கிக் கொள்வது.

ஈழத் தமிழரின் ஆயுதப் போராட்டமும் கூட ஒரு குறிப்பிட்ட சூழலின் விளைவாக ஏற்பட்டதுதான். அன்றைய சூழலில் அவ்வாறான போராட்டங்களுக்கான நியாயம் இருந்தது. ஆட்சியாளர்கள் தமிழரின் நியாயமான கோரிக்கைளை புறக்கணித்தமையின் விளைவாகவே, தமிழர் அரசியலில் தீவிரப் போக்குள் முகம் காட்டத் தொடங்கியது. அந்தத் தீவிரப் போக்குகளையும் அதன் விளைவுகளையும் கணித்து, அப்போதே தமிழ் மக்களின் மனக் குறைகளை போக்கும் நடவடிக்கைகளை, தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்க வில்லை. இந்தப் பின்புலத்தில்தான் தமிழர் அரசியலில் வன்முறை விருப்பம் தீவிரமடைந்தது. ஆனால் போராட்டத் தில் இந்தியாவின் தலையீடும், இந்தியா வின் நேரடியான இராணுவத் தலையீடும் நிலைமைகளில் பெரும் மாற்றங்களை கோரியிருந்தது. அந்த மாற்றங்களை உள்வாங்கிச் செயற்பட வேண்டிய கடப் பாடு தமிழர் தரப்புக்களுக்கு இருந்தது ஆனால் அது நடைபெற்றிருக்கவில்லை. கடந்த காலத்தை சுருக்கமாகப் பார்ப்ப தானால் இப்படித்தான் நோக்க முடியும். நடந்து முடிந்தவைகள் அனுபவங்கள் மட்டும்தான். அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள மட்டுமே முடியும்.

ஆனால் இங்கு கேள்வி ஈழத் தமிழர் மத்தியிலிருந்த சிந்திக்கும் தரப்பினர், பல்கலைக்கழக சமூகம் என்போர், கல்விமான்கள் என்போர், சிவில் சமூகத்தினர் என்போர், மாற்றங்களை புரிந்து கொண்டு சிந்திப்பவர்களாக இருந்தனரா அல்லது எது பெரும் போக்கோ, எந்தத் தரப்பு மேலாதிக்கம் பெறுகின்றதோ - அந்த தரப்பின் நிலைப்பாடுகளோடு ஒத்தோடுபவர்களாக இருந்தனரா? மனச்சாட்சியுடன் சிந்தித்தால், இதற்கான பதில் என்ன என்பது நம் அனைவருக்கும் தெரியும் அல்லவா! இன்று ஒரு தோல்வி ஏற்பட்ட பின்னர் தடுமாறிக் கிடக்கும் நாம், இந்தப் பேரழிவிற்கு பின்னால் நமது ஒத்தோடும் பண்பும் இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளும் பக்குவத்தோடு இருக்கின்றோமா?

பேரழிவு ஒன்றை சந்தித்து, நிலை குலைந்த பின்னரும் கூட, எங்களால் ஆரோக்கியமாக சிந்திக்கவோ, எங்களின் பிரதிதிநிதிகளை சரியாக தெரிவு செய்யவோ முடியாமல் இருக்கின்றது என்றால், அதன் பொருள் என்ன? இப்போது பிரச்சினை அரசியல்வாதிகள் அல்ல - அவ்வாறான அரசியல்வாதிகளை தெரிவு செய்யும் மக்கள்தான். ஒரு சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் என்போர்தான் அந்த சமூகத்தின் அரசியல் பாதையை தீர்மானிப்பதில் பெரிய பங்கை ஆற்றுகின்றனர் ஆனால் தமிழ்ச் சூழலிலோ முன்னேறிய பிரிவினர் என்போரோ, சாதாரன மக்களை விடவும் மோசமான நிலையில் இருப்பதாகவே தெரிகின்றது. கட்சிவாத குழுச் சண்டைகள், சாதி, பிரதேசம் என்னும் அற்பத்தனங்களுக்குள், தங்களின் மூளையை அடகு வைத்தவர்களாகவே இருக்கின்றனர். நிலைமை இவ்வாறிருந்தால், தமிழ் அரசியல் சூழலில் மாற்றம் எவ்வாறு நிகழும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கைபேசிச் செயலிகளின் கைதியாக உள்ள ஒரு காலத்தில் வேலைக்கு ஆள் பிடிப்பது?



நிலாந்தன்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒரு பண்ணையாளர் சில மாதங்களுக்குமுன் கேட்டார் “பண்ணைகளில் வேலை செய்வதற்கு ஆட்கள் இல்லை. கடைகளில் வேலை செய்வதற்கும் ஆட்கள் இல்லை. இந்த விடயங்கள் தொடர்பாக எழுதுங்களேன்” என்று. பண்ணைகளில், கடைகளில் மட்டுமல்ல, வாகனம் திருத்துமிடங்களில், வயல்களில், வீடுகளில், கட்டுமானத் தளங்களில், மேசன் வேலை, வயரிங், பெயிண்டிங் வேலைகளுக்கு என்று பல துறைகளுக்கும் வேலைஆட்கள் இல்லை.

கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் சொன்னார், “வேலையாட்களை நம்பி ஓர் ஒப்பந்தத்தை த எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஏனென்றால் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகி வருகிறது” என்று. பல கட்டட ஒப்பந்தக்காரர்கள் வேலைகளைக் குறைத்து வருகிறார்கள். முன்பு தெற்கிலிருந்து சிங்கள வேலையாட்கள் வந்தார்கள். இப்பொழுது அது அனேகமாகக் குறைந்துவிட்டது.

சில மாதங்களுக்கு முன் கிழக்கில் ஒரு கால்நடைப் பண்ணையில் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஆட்கள் தேவை என்று ஒரு விளம்பரம் வெளிவந்தது. அந்த வேலைக்கு 60,000 ரூபாய்கள் சம்பளம் என்றும் அதில் காணப்பட்டது. தொடர்பு கொள்வதற்கு கைபேசி இலக்கம் ஒன்றும் அங்கே கொடுக்கப்பட்டிருந்தது.

கடந்தவாரம் மற்றொரு விளம்பரம் ஊடகங்களில் பிரசித்த மாகியது. கொழும்பில் உள்ள ஒரு சாப்பாட்டுக் கடைக்கு கொத்துரொட்டி மாஸ்டர் தேவை என்றும் அவருக்கு சம்பளமாக ஒரு லட்சத்து 30ஆயிரம் வழங்கப்படும் என்றும் அந்த விளம்பரத்தில் காணப்பட்டது. அந்த விளம்பரத்தை முன்வைத்து சமூக ஊடக வலைத்தளங்களில் உரையாடல்கள் நிகழ்ந்தன. அந்த உரையாடல்களில் இருந்து சில சுவாரசியமான தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.


கொத்துரொட்டி மாஸ்டருக்கு மட்டுமல்ல, சாதாரண கூலிவேலைக்கும் மேசன், பெயிண்டர், வயரிங் வேலைகளுக்கு உதவியாளர்களாக நிற்பவர்களுக்கும் எவ்வளவு சம்பளங்கள் வழங்கப்படுகின்றன என்று அவரவர் தத்தமது அனுபவத்தில் இருந்து பகிர்ந்திருந்தார்கள். அந்த வேலை ஆட்களுக்கு கொடுக்கப்படும் நாட் சம்பளம் 2500 ரூபாய்களில் இருந்து தொடங்குகிறது.

கொத்துரொட்டி போடுவது ஒரு தொழில் மட்டுமல்ல, அது ஒரு கலை. சமையல் ஓர் அற்புதமான கலை. அதற்கு இருக்கும் கலைப் பெறுமதியை கருதினால் அதற்கு அதிக சம்பளம் கொடுக்கத்தான் வேண்டும். உயர்தர விருந்தினர் விடுதிகளில் சமையல் செய்பவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்கப்படுகிறது. கப்பல்களில் அதைவிட அதிகம்.

சமையல் போலகலையாகச் செய்யவேண்டிய தொழில்கள் உண்டு. அதைவிட முக்கியமாக கடமையாக, தொண்டாக, சேவையாகவும் செய்யவேண்டிய தொழில்களும் உண்டு. அவற்றுள் முக்கியமானவை, முதியோரைப் பராமரிப்பது, சிறுவரைப் பராமரிப்பது, கர்ப்பிணிகளைப் பராமரிப்பது போன்றவை.

புலம்பெயர்ந்த ஒருவரைத் திருமணம் செய்த ஒரு பெண், கணவனோடு இணைவதற்கு விசாவிற்காகக் காத்திருப்பவர், சொன்னார், அவருடைய கணவனின் தாயாரைப் பராமரிப்பதற்கு இங்கேயாரும் இல்லை. எல்லா உறவினர்களும் வெளியே. காலையில் ஒருபெண் வருகிறார். இரவு ஒருபெண் வருகிறார். காலையில் வருபவருக்கு 40,000 ரூபாய். இரவு வருபவருக்கு பத்தாயிரம் ரூபாய். இருவருக்கும் சாப்பாடு கொடுக்கவேண்டும். இருவரும் பராமரிக்கப்படும் பெண்ணின் துணிகளைத் துவைக்கமாட்டார்கள். வீட்டைத் துப்புரவாக்க மாட்டார்கள். அந்த முதியபெண்ணைப் பராமரிப்பது மட்டும் தான்.

இவ்வாறு தனித்து விடப்பட்ட முதியவர்கள் தொடர்பாக உரையாடிக் கொண்டிருந்தபோது, அண்மையில் ஒரு சந்திப்பில் ஒருபெண் மருத்துவர் சொன்னார், முதியோர் பராமரிப்புத் துறை எனப்படுவது ஒரு பெரிய மாஃபியா வாகவளர்ந்து வருகிறது என்று. பெருமளவு முதியோர் தனித்துவிடப்படக் காரணம் புலப்பெயர்ச்சி. சிறுதொகையினர் உள்ளூரில் பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள். புலப்பெயர்ச்சியின் நேரடி விளைவுகளில் ஒன்றாக, பிள்ளைகள் இருந்தும் பெற்றோர் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட குற்றவுணர்ச்சி காரணமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது முதிய உறவினர்களைப் பராமரிப்பதற்காகக் காசை அள்ளிக் கொடுக்கிறார்கள். இந்தக் காசை வைத்துக்கொண்



டுமுதியோரைப் பராமரிக்கும் தொழில்துறையானது ஒரு மாஃபியாவாக வளர்ந்து வருவதாக மருத்துவச் செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

முதியோர் பராமரிப்புத் துறையானது அதிகம் வருவாய் ஈட்டும் ஒரு தொழிலாக வளர்ந்துவிட்டது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதனால்தான் முதியோர் இல்லங்களில் அனர்த்தங்கள் நிகழ்கின்றன. அண்மையில் கூட ஒரு முதியோர் இல்லம் தீப்பிடித்து 12பேர் எரிந்து உயிரிழந்தார்கள். யாழ்ப்பாணத்திலும் சரியாகப் பராமரிக்கப்படாத முதியோர் இல்லங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் உண்டு.

வடக்கு மாகாணத்தில் மட்டும் மொத்த சனத்தொகையில் 20 விகிதம் 60 வயதிற்கும் அதிகமான முதியோர். அதனால் முதியோரைப் பராமரிப்பதற்குரிய சேவையானது ஒரு தொழில்துறையாக வளர்ந்து வருகிறது. ஒரு முதியோரைப் பராமரிப்பதற்கு ஒரு மாதத்துக்கு ஆகக் குறைந்தது 60,000 ரூபாயும் ஆகக் கூடியது ஒரு லட்சத்திற்கு அதிகமாகவும் கேட்கப்படுகிறது. குறிப்பாக படுக்கையில் விழுந்த முதியோரைப் பராமரிப்பதற்கு அதிக தொகை. புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளில் ஒரு பகுதி அதற்காகக் காசைஅள்ளிக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

அதாவது வடமாகாணத்தின் மொத்த ஜனத்தொகையில் 20 விகிதமாக உள்ள முதியோரைப் பராமரிப்பதற்கான சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அவற்றுக்குக் காசை அள்ளிக் கொடுக்க புலம்பெயர்ந்த உறவுகள் தயாராகக் காணப்படுகிறார்கள். எனவே சேவை நாடிகளையும் சேவை வழங்கிகளையும் இணைப்பதற்கான வணிகச்சூழல் ஒன்று பலமாகக் காணப்படுகிறது. ஆதனை வெற்றிகரமாகக் கையாள்வதற்கு தொழில் முனைவோர் தேவை.

இது தொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன் நான் ஒரு கட்டுரை எழுதியபோது “டான் ரிவி” நிறுவனத்தின் பணிப்பாளர் குகநாதன் எனக்கு ஒரு தொடுப்பை அனுப்பினார். அது லண்டனில் பிறந்த இலங்கைத் தமிழரான ஒரு மருத்துவ நிபுணரைப் பற்றியகாணொளி.

பென் மருதப்பு என்று அழைக்கப்படும் மஹிபென் மருதப்பு, 1988ல் லண்டனில் இலங்கைத் தமிழ்ப் பெற்றோருக்கு பிறந்தார். இங்கிலாந்தின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் கற்று மருத்துவ நிபுணர் ஆனார். அவருடைய தாயார் ஒருமுறை தவறி விழுந்ததில் முதுகெலும்பு உடைந்துவிட்டது. ஆவரை வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்குபென் மருதப்புவும் அவருடைய சகோதரியும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அப்பொழுது தான் இது போன்ற சேவைகளுக்குப் போதிய அளவு சேவை வழங்கும் நிறுவனங்கள் இல்லை என்பதைப் பென் கண்டுபிடித்தார். அதன் விளைவாக அவர் 2016 ஆம் ஆண்டு உருவாக்கியது தான் Cera(Cera Care)- “செரா” என்று அழைக்கப்படுகின்ற அந்த சேவைவ ழங்கும் நிறுவனம் ஆகும். சேவைநாடிகளையும் சேவை வழங்கிகளையும் இணைக்கும் இலத்திரனியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தளம் இது. வீடுகளில் பராமரிக்க ஆளில்லாமல் தவிக்கும் நோயாளிகளுக்கும் முதியோருக்கும் சேவை வழங்கும் நிறுவனம் என்றஅடிப்படையில் “செரா” இங்கிலாந்திலும் ஐரோப்பா முழுவதிலும் மிகப்பெரிய சுகாதாரத் தொழில்நுட்ப நிறுவனமாக மேலெழுந்துள்ளது.

இந்நிறுவனத்தின் கடந்த ஆண்டுவருவாய் கிட்டத்தட்ட 500மில்லியன் பவுன்ஸ் என்று கணிப்பிடப்படுகிறது. இந்நிறுவனம் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 2.5 மில்லியன் வீட்டுப் பராமரிப்பு சேவைகளை வழங்குகிறது.மேலும், அதன் தொழில்நுட்பம்சார் செயற்பாடுகளின் மூலம் பிரித்தானியாவின் தேசிய சுகாதார சேவையானது ஒருநாளைக்கு கிட்டத்தட்ட ஒரு மில்லியன் பவுன்சை சேமிக்கின்றது.

தனது தாயைப் பராமரிப்பதில் ஒரு மருத்துவர் எதிர்கொண்ட சாவால்களின் விளைவாக உருவாகியது “செரா” நிறுவனம். இது போன்ற நிறுவனங்களை, செயலிகளை ஏன் தாயகத்தில் உள்ள தொழில்நுட்பச் செயற்பாட்டாளர்களும் தொழில் முனைவோரும் உருவாக்கக் கூடாது?

ஏற்கனவே துசுனைந- “ஜேறைட்” என்ற பெயரில் ஒரு போக்குவரத்துச் சேவை வழங்கும் செயலி இயங்குகிறது. யாழ்ப்பாணம், திருநெல்வேலியை மையமாகக் கொண்டியங்கும் “ஸ்பீட் ஐடிநெட்” என்ற நிறுவனத்தின் பணிப்பாளரான தவரூபன் இந்த நிறுவனத்தை 2023ஆம் ஆண்டு தொடங்கினார். ஏற்கனவே இந்த தொழில்துறையில் நன்கு ஸ்தாபிதமாக உள்ள செயலிகளோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னே றுவதில் நிறையச் சவால்கள் உண்டு என்ற போதிலும் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட ஒரு சேவை வழங்கி நிறுவனமாக அதற்கு உரிய முக்கியத்துவம் உண்டு.

அப்படித்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட தொழில்துறைகளுக்கான வேலையாட்களையும் சேவை நாடிகளையும் இணைப்பதற்கான TOPQER “டொப்கர்” ( https://Topqer.com ) என்ற நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டதொழில் முனைவோரால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நிறுவனம் விரைவில் அதற்குரிய கைபேசிச் செயலியைத் தயாரித்து வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


இவை போன்ற முயற்சிகளைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். ஈழத் தமிழ்ச் சந்தை என்பது மிகவும் சிறியது. இச்சிறிய சந்தைக்குள் தொழில் முனைவோர் உடனடியாக அதிகரித்த லாபத்தை எதிர்பார்க்க முடியாது.கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு வகைப்பட்ட நிறுவன உருவாக்கிகள் தோன்றியிருக்கிறார்கள். மதம் சார்ந்தும், மதம் சாராமலும் நிறுவன உருவாக்கிகள் கட்டியெழுப்பிய சிறிய மற்றும் பெரிய நிறுவனங்களின் திரட்டப்பட்ட விளைவுதான் இப்பொழுதுள்ள நவீன தமிழ்ச் சமூகம் ஆகும்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்குமுன் தோன்றிய நிறுவன உருவாக்கிகளைப் போல இப்பொழுது தகவல் தொழில்நுட்பத் தளத்தில் புதிய நிறுவனஉருவாக்கிகள் தோன்றுகிறார்கள். பென் மருதப்புக்களை முன்னுதாரணமாகக் கொண்டு நமது தொழில் முனைவோர் முன்னேற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்மக்களுக்கு எஞ்சப்போவது

# மாகாணசபைகள் என்ற பெயர்ப்பலகை மட்டுமா?



கந்தையா அருந்தவபாலன்

இலங்கை ஆட்சியாளர் என்ற ஆணுக்கும் தமிழ்த்தரப்பு என்ற பெண்ணுக்கும் இடையில் வேண்டாவெறுப்பாகப் பிறந்த ஒரு குழந்தைதான் மாகாணசபைகள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம். அது கூட பக்கத்து வீட்டுப் பலசாலியின் அழுத்தத்தின் பேரில்தான் பிரசவமானது. அதனால்தான் அது பிறக்கும்போது பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது. இவ்வாறு ஒரு குறைபாடுடைய குழந்தைக்குப் பதிலாக ஆரோக்கியமான அழகிய குழந்தையொன்றைப் பெறமுடியும் என அப்போது அந்தப்பெண் கருதினாள். அப்பெண் கருதுவதுபோல ஆரோக்கியமான பெண் குழந்தை பெறுவதைத் தடுக்கவும் வேண்டும், அதேவேளை குழந்தையொன்றைக் கொடுக்கவேண்டும் என்று ஆண் கருதினான். அதுதான் பக்கத்து வீட்டுக்காரனின் நோக்கமும். அதனால் சுயமாக இயங்க முடியாத வகையில் பெயருக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தான். ஆழகான குழந்தைக்கு ஆசைப்பட்டதாய் இப்போது 'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டாள். அதனால் குறைபாடிருந்தாலும் அப்பிள்ளையாதல் உயிருடன் இருக்கட்டும் என நினைக்கிறாள். ஆனால் பிறக்கும்போதே குறைபாடுகளைக் கொண்டிருந்த அக்குழந்தையை படிப்படியாகக் குற்றுயிராக்கியது மட்டுமன்றி அதனை முற்றாக அடக்கம் செய்யவேண்டுமென்று ஆண் நினைக்கிறான். யார் எக்கேடுகெட்டாலும் நமக்கென்ன, என்னுடைய காரியம் நிறைவேறினால் போதும் என்ற நிலையில் இப்போது பக்கத்துவீட்டுப் பலசாலி. இதுதான் மாகாண சபைகளின் இன்றைய நிலை.

விடுதலைப்புலிகள் மாகாணசபை முறைமையை ஏற்றிருந்தால் அதிலிருந்து படிப்படியாக மேம்பட்டிருக்க முடியும் என்றும் அதன் பின்னரான அழிவுகளைத் தடுத்திருக்கலாம் என்றும் இன்றுவரை ஒரு கருத்து நிலவிவருகிறது. அதுவெறும் கருதுகோள் மட்டுமே. உண்மையான முடிபன்று. ஆழமாகச் சிந்தித்தால் அது விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்குவதற்கான முதற்கட்ட முயற்சியாகவும் கருதுவதற்கு இடமுண்டு. அதேபோல நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அதற்கான இறுதி முயற்சியாகவும் கருதப்படலாம். முாகாணசபைகளை மேம்படுத்தியிருக்கலாம் என்பது எப்படி ஒரு கருதுகோளாக இருக்கிறதோ அதேபோன்றது தான் தமிழீழம் என்பதுவும். ஆனால் ஒன்றுமட்டும் உறுதியானது. தற்போதுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பும்,தெற்கின் மகாவம்ச மனநிலையும், தமிழர் தரப்பின் பலவீனமும் இருக்கும்வரை தமிழ் மக்களுக்கு எந்தவொரு நியாயமான தீர்வும் கிடைக்கப்போவதில்லை என்பதே அதுவாகும்.

இவைதான் மாகாணசபைகளின் இன்றைய நிலைமைக்கான உண்மையான காரணிகள். வழங்கும்போதே பலவீனமான இருந்த மாகாணசபை முறைமையை மேலும் கோதாக்குவதற்கு ஆட்சியாளர்கள் பல உத்திகளை கையாண்டு வருவதைக் காணமுடியும். அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்திற்கமைய வழங்கப்படவேண்டிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடக்கத்திலிருந்தே மாகாணசபைகளுக்கு வழங்கப்படவில்லை. எடுத்ததுக்கெல்லாம் அரசியலமைப்பை மீறி எதனையும் செய்யமுடியாது என்று கூறும், அவ்வாறேதும் வரும்போது அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கும் தெற்கு அரசியல்வாதிகள் அரசியலமைப்பிலுள்ள இந்தவிடயங்கள் 40 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தாமல் இருப்பதைப்பற்றி எதுவும் கூறுவதில்லை. அவர்கள் அள்ளிக்கொடுக்காவிட்டாலும் கிள்ளிக்கொடுத்தைக்கூட விட்டுவைத்தார்களா என்றால் அதுவுமில்லை.

ஜே.ஆர். ஜெயவர்ததனா அள்ளிக்கொடுக்காமல் கிள்ளிக்கொடுக்க அதைக்கூடத் தோலிருக்க சுளைவாங்கு மாப்போல பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் படிப்படியாகப் பிடுங்கியெடுத்தன. இந்தக் கைங்கரியத்தைத் தொடக்கிவைத்த பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவையே சேரும். அதன்பின் வந்த எல்லா ஆட்சியாளரும் சட்ட ஏற்பாடுகளின் மூலமோ அன்றி செயற்பாடுகளின் மூலம்மோ அக்கைங்கரியத்தை தொடர்ந்து செய்துவருகின்றனர். தற்போதைய ஒற்றையாட்சிக் கட்டமைப்பிலும், மாகாணசபைச் சட்டங்களிலுள்ள ஓட்டைகளாலும் அவற்றைத் தடையின்றி அவர்களால் செய்யமுடிகிறது. அவ்வாறு தடையேதும் ஏற்படுமானால் அரசியலமைப்பை மாற்றவோ அல்லது பிரதம நீதியரசரை மாற்றவோ கூட அவர்கள் தயங்கியதில்லை. இந்தவிடயத்தில் தெற்கில் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற பேதம் கிடையாது. எல்லாரும் கூறுவது ஜெயவேவா தான்.

இந்த அஞ்சலோட்டத்தில் குறுங்கோல் இப்போது அனுரவின் கைகளில். அவர் முன்னையவர்களிலிருந்து தான் வேறுபட்டவர் என்று சொன்னாலும் இந்த விடயத்தில் அவர்களைப்போலத் தான் என்பதைப் படிப்படியாக நிரூபித்து வருவதைக் காணமுடிகிறது. ஆனால் முன்னையவர்களின் அஞ்சலோட்டத்துக்கு பக்கபலமாகச் செயற்பட்டவர் என்ற வகையில் அவர்களை விடச் சிறப்பாக ஓடக்கூடிய வல்லமை அவருக்குண்டு. அதனை மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தாது காலத்தைக் கடத்துவதற்கு ஆடும் நாடகங்களிலிருந்தும் ஆளுநர் மற்றும் அதிகாரிகளைக் கொண்டு செய்யும் காரியங்களிலிருந்தும் இலகுவாக அறிந்துகொள்ளமுடியும். கடந்த 40 ஆண்டுகளில் இரண்டு தடைவ மட்டும் கிழக்கிற்கும் ஒரு தடைவ மட்டும் வடக்குக்கும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்ற ஒன்றேபோதும் அச்சபை எப்படியான முக்கியத்துவம் கொண்டது என்பதற்கு. தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகள் இல்லையென்றால் அதிகாரங்களைப் பிடுங்கவேண்டிய தேவையும் எழாது.

ஆனால் முன்னர் மொத்தமாகப் பிடுங்கிவிட்டு இப்போது தனித்தனியாகப் பிடுங்குவதற்கான முயற்சிகள் திட்டமிட்டு அரங்கேறத் தொடங்கியுள்ளன. முன்னர் பாடசாலைகள். இப்போது வைத்தியசாலைகள். முதலில் வளம் நிறைந்த சில பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றுவதில் தொடங்கி பின்னர் அடிப்படைத் தகுதி விதிகளைப் புறந்தள்ளி அது அரசியல் மயப்பட்டதொன்றாகி மாற்றப்பட்டது. புாடசாலை முகப்பிலும் கடிதத் தலைப்பிலும் தேசியப் பாடசாலை என்று குறிக்கப்படுவதைவிட பெரியவேறுபாடுகள் எதனையும் இவற்றுக்கிடையில் காணமுடியாது. தேசியபாடசாலைகள் என்ற பெயரே அடிப்படையில் தவறான ஒன்றாகும். தேசிய என்பது நாட்டுக் குரித்தான எல்லாவற்றையும் குறித்து நிற்கும். அவ்வாறானால் மாகாணப் பாடசாலைகள் என்று கூறப்படுபவை நாட்டுக்குரித்தானவை இல்லையா? மனிதர்களின் இயல்பான குணங்களிலொன்று தன்னை மற்றவரைவிட ஏதாவது வழியில் உயர்வாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று விரும்புவது. இந்தக் குணம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சிலரிடம் அதிகமுண்டு. வலயக்கல்விப் பணிப்பாளருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஓர் அதிபர் பலரின் கால்களில் விழுந்து தனது பாடசாலையை தேசியப் பாடசாலையாக மாற்றிய வரலாறும் இங்குண்டு.





**செயற்கையாக உருவாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வின் பின்னாலுள்ள அரசியல் நோக்கங்களை தமிழ்மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். இல்லையெனில் மாகாணசபை என்ற பெயர்ப்பலகை கூடமிஞ்சாது.**

பாடசாலைகள் போல வைத்தியசாலைகளை மாகாண நிர்வாகத்திலிருந்து நேரடியாக கொழும்பின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடக்கப்பட்டுவிட்டன. முதலில் மன்னார் வைத்தியசாலையில் முன்மொழியப்பட்டு இப்போது தெல்லிப்பளை வைத்தியசாலையில் வழிமொழியப்படுகிறது. ஒவ்வொன்றுக்கும் பின்னால் பலகாரணங்கள் கூறப்பட்டாலும், கூறப்படாத காரணிகளாக வைத்தியர்கள், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நலன்களும் அதன் பின்னால் உள்ளன. முாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் சமஷ்டியே எங்கள் இலக்கு என்பது போன்ற கோசங்களை அரசியல் தலைவர்கள் சிலர் அடிக்கடி உச்சரித்துத் தம்மைத் தமிழ்த்தேசியவாதிகளாக ஒரு புறத்தில் காட்டிக்கொண்டு மறுபுறத்தில் மாகாணசபைகளிடம் இருக்கின்ற எச்சத்தையும் தாரைவார்ப்பதற்கு ஆதரவளிப்பதையும் காணமுடிகிறது. மன்னார் வைத்தியசாலை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சத்தியலிங்கம் போன்றோர் இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு.

இவ்வாறானதொரு மனப்பாங்கு மக்களிடத்தில் ஏற்படுவதற்குக் காரணம் மாகாணம் கொழும்பு மையம் என்ற செயற்கையான ஏற்றத்தாழ்வொன்று உருவாக்கப்பட்டிருப்பதாகும். முாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற நிறுவனங்களை கொழும்பு மையமாக்க இங்கிருக்கும் சிலர் விரும்புவதற்கான பிரதான காரணங்கள் ஒன்று ஆளணி வளங்கள், மற்றது பௌதிக வளங்கள். அதாவது கொழும்பு மையத்தின் கீழ் இருந்தால் தேவையான வளங்களை இலகுவாகப் பெறமுடியும் என்பது. இதுசெயற்கையாக உருவாக்கப்பட்டதொன்று. தென்பகுதியிலுள்ள இது போன்ற பல பாடசாலைகள், வைத்திய சாலைகளை நேரில்பாரத்தால் இந்த ஏமாற்றுபுலப்படும்.

இங்குள்ள மாகாணசபைகள் இந்தியாவிலுள்ளது போன்ற மாநிலக்கட்டமைப்பைக் கொண்டவையல்ல. அங்கு மாநில அரசுகளின் வருவாய் மூலங்களே அதற்கான வருமானத்தை அதிகளவில் கொடுக்கின்றன. ஆனால் இலங்கையில் சகல அரச நிறுவனங்களுக்கான வளங்களும் கொழும்பு மையத்தாலேயே வழங்கப்படுகின்றன. மாகாணசபைகளுக்கு தனியான வருமான மூலங்கள் எதுவுமில்லை. ஆரச நிறுவனமொன்றுக்கு நிதி ஒதுக்கப்படுவதுபோல அரச பாதீட்டினூடாக ஒதுக்கப்படும் நிதியே மாகாணசபைகளின் பிரதான வரவுகளாகும். அதுவும் மிகக் குறைந்தளவில். அதேபோல மாகாணசபைகள் பட்டதாரிகளை மட்டுமே பணியாளர்களாக நியமிக்கமுடியும். அதுவும் திறைசேரிஅனுமதித்தால் மட்டும். இவ்வாறு மாகாணசபைகளின் கீழுள்ள நிறுவனங்களாயினுஞ்சரி, கொழும்பின் நேரடி நிர்வாகத்திலுள்ள நிறுவனங்களாயினுஞ்சரி அவற்றுக்கானவளங்கள் யாவும் கொழும்பின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவற்றை முகாமை செய்பவர்களும் கொழும்பின் கட்டுப்பாட்டிலேயே உள்ளனர். அவ்வாறாயின் கொழும்பின் நேரடி நிர்வாகத்தின் கீழ் நிறுவனமொன்றைக் கொண்டுவந்து வழங்கப்படும் வளங்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் இருக்கும் வேளையிலும் வழங்கலாமல்லவா? இவ்வாறுசெயற்கையாக உருவாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வின் பின்னாலுள்ள அரசியல் நோக்கங்களை தமிழ்மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். இல்லையெனில் மாகாணசபை என்ற பெயர்ப்பலகை கூட மிஞ்சாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முடிவுறுமா மத்திய கிழக்கு போர்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# பிரகடனமான வெற்றி, பகிரப்படாத இழப்பு!

மத்திய கிழக்கில் பல மாதங்களாக நீடித்த பேரழிவுகரமான மோதலுக்குப் பின்னர், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் இறுதியாக முடிவுக்கு வந்துள்ளது. பகைமைகளை நிறுத்தும் நோக்கில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து, இரு தரப்பினரும் தங்களது வெற்றியை உலகிற்கு அறிவித்துள்ளனர். ஆனால் போரின் முடிவை நெருக்கமாக ஆராயும்போது, இந்த மோதல் ஒரு தெளிவான வெற்றியாளரை உருவாக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மாறாக, மனித உயிர்கள், பொருளாதாரம், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் உலக அரசியலில் ஆழமான காயங்களை ஏற்படுத்திய ஒரு போரின் முடிவாகவே இது பார்க்கப்படுகிறது.

**ஈரானின் மூலோபாய வெற்றி:**

தெஹ்ரானின் பார்வையில், இந்தப் போரின் மிகப் பெரிய சாதனை தப்பிப் பிழைத்ததே ஆகும். கடுமையான வான்வழித் தாக்குதல்கள், இராணுவ இழப்புகள், பொருளாதாரச் சுமைகள் மற்றும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை எதிர்கொண்ட போதிலும், ஈரானிய அரசு சிதையவில்லை. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் செலுத்திய முன்னெப்போதும் இல்லாத அழுத்தத்திற்கும் மத்தியில், நாட்டின் அரசியல் அமைப்பு தொடர்ந்து செயல்பட்டது. இதுவே ஈரானுக்கு ஒரு மூலோபாய வெற்றியாகக் கருதப்படுகிறது.



இந்தப் போரின் ஆரம்பத்தில் மிகவும் அதிர்ச்சிகரமான நிகழ்வாக உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மரணம் அமைந்தது. இருப்பினும், ஆட்சியில் எந்தவித குழப்பமும் ஏற்படாமல், நிபுணர்கள் சபை மூலம் மொஜ்தபா கமேனி புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த மாற்றம் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்ததுடன், ஆட்சியின் தொடர்ச்சியையும் உறுதிப்படுத்தியது. வெளிநாடுகள் எதிர்பார்த்த உள்நாட்டு சிதைவு அல்லது ஆட்சி வீழ்ச்சி எதுவும் நிகழவில்லை.

ஈரான் தனது பிராந்திய செல்வாக்கையும் இந்தப் போரின் போது வெளிப்படுத்தியது. குறிப்பாக ஹோர்முஸ் நீரிணை வழியாக நடந்த கப்பல் போக்குவரத்து தடங்கல்கள் உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின. உலகின் மிக முக்கியமான எண்ணெய் வர்த்தகப் பாதைகளில் ஒன்றின் மீது ஈரான் செலுத்தக்கூடிய தாக்கம், சர்வதேச பொருளாதாரத்திற்கு அதன் முக்கியத்துவத்தை மீண்டும் நினைவூட்டியது. இதன் மூலம் போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளிலும் ஈரான் வலுவான நிலையைப் பெற்றது.

மறுபுறம், அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்களது இராணுவ வெற்றிகளை முன்வைக்கின்றன. இந்த மோதலின் போது ஈரானின் கடற்படைத் திறன்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. பல ஆயுத உற்பத்தி மையங்கள் அழிக்கப்பட்டன. மேலும், ஈரானின் அணுசக்தித் திட்டத்துடன் தொடர்புடைய முக்கிய வசதிகள் சேதமடைந்தன. நீண்ட காலமாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்பு அக்கறைகளின் மையமாக இருந்த இந்த இலக்குகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாக அவர்கள் கருதுகின்றனர்.

**அமெரிக்க இராணுவ மேலான்மை :**

அமெரிக்க இராணுவம் தனது தொழில்நுட்ப மேன்மையையும் உலகளாவிய தாக்குதல் திறனையும் மீண்டும் நிரூபித்தது. அதேபோல், இஸ்ரேல் தனது எல்லைகளுக்கு அப்பால் ஈரானின் செல்வாக்கை கட்டுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய இலக்குகளைத் தாக்குவதில் வெற்றி பெற்றது. எனினும், இந்த மோதலின் மிகப்பெரிய அரசியல் இலக்காகக் கருதப்பட்ட ஆட்சி மாற்றம் நடைபெறவில்லை. கடுமையான இராணுவ அழுத்தத்திற்குப் பின்னரும், ஈரானின் அரசியல் அமைப்பு தொடர்ந்தது. இதன் மூலம், இராணுவ வெற்றிகள் எப்போதும் அரசியல் வெற்றிகளாக மாறாது என்ற உண்மை மீண்டும் வெளிப்பட்டது.

போரின் முடிவை அறிவித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்கால ஸ்திரத்தன்மைக்கான ஒரு முக்கியமான படியாகக் கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து



தெஹ்ரானின் பார்வையில், இந்தப் போரின் மிகப்பெரிய சாதனை தப்பிப் பிழைத்ததே ஆகும். கடுமையான வான்வழித் தாக்குதல்கள், இராணுவ இழப்புகள், பொருளாதாரச் சுமைகள் மற்றும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை எதிர்கொண்ட போதிலும், ஈரானிய அரசு சிதையவில்லை. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் செலுத்திய முன்னெப்போதும் இல்லாத அழுத்தத்திற்கும் மத்தியில், நாட்டின் அரசியல் அமைப்பு தொடர்ந்து செயல்பட்டது. இதுவே ஈரானுக்கு ஒரு மூலோபாய வெற்றியாகக் கருதப்படுகிறது.




முக்கிய தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஹோர்முஸ் நீரிணை மீண்டும் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்காக திறக்கப்பட உள்ளது. ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பைக் குறைக்கும் நடவடிக்கைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நீடித்த அரசியல் தீர்வை நோக்கி எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கான கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தம் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்துவிடவில்லை. பல தசாப்தங்களாக நீடித்து வரும் பரஸ்பர அவநம்பிக்கை இன்னும் நீங்கவில்லை. பாதுகாப்பு அச்சங்கள், மத மற்றும் அரசியல் போட்டிகள், பிராந்திய ஆதிக்கப் போட்டிகள் போன்றவை எதிர்காலத்தில் மீண்டும் பதற்றத்தை உருவாக்கும் சாத்தியத்தைத் தக்கவைத்துள்ளன.

இந்தப் போரின் தாக்கம் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் மட்டுப்படவில்லை. வளைகுடா நாடுகளில் பலவும் கடுமையான சேதங்களைச் சந்தித்தன. எண்ணெய் உற்பத்தி நிலையங்கள், துறைமுகங்கள், போக்குவரத்து வலையமைப்புகள் உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்புகள் தாக்கப்பட்டன. இதனால் புனரமைப்பிற்காக பில்லியன் கணக்கான டாலர்கள் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொண்டிருந்த பல அரசுகளுக்கு இது கூடுதல் சுமையாக அமைந்துள்ளது.

இந்த மோதலின் குறிப்பிடத்தக்க இராஜதந்திர வெற் [illegible]

அனைத்து தரப்பினருடனும் தொடர்புகளைப் பேணியதன் மூலம், அது ஒரு முக்கிய மத்தியஸ்தராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்ததிலும், அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை ஆதரித்ததிலும் பாக்கிஸ்தான் பங்கு அதன் பிராந்திய செல்வாக்கை மேலும் உயர்த்தியுள்ளது.

ஆயினும் இந்தப் போர் தெளிவான வெற்றியாளரை உருவாக்கவில்லை. ஈரான் தனது அரசியல் அமைப்பைப் பாதுகாத்தது. அமெரிக்காவும் இஸ்ரேலும் முக்கிய இராணுவ இலக்குகளை அடைந்தன. ஆனால் இரு தரப்பினரும் பெரும் மனித மற்றும் பொருளாதார விலையைச் செலுத்தியுள்ளனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துள்ளன. பல நகரங்கள் பாரியளவில் சேதமடைந்துள்ளன. உலக பொருளாதாரமும் அதிர்வுகளைச் சந்தித்துள்ளது.

**ஈரானுக்கு முழு வெற்றி:**

வாஷிங்டன் அரசு இந்த சமாதான நடவடிக்கைகளை எப்படித் திரித்துக்கூற முயன்றாலும், ஈரான் ஒரு தோற்ற நாடாக வெளியேறப் போவதில்லை. ஈரான் பாரிய குண்டுவீச்சுகளில் இருந்து தப்பித்தது. ஈரான் தனது அரசாங்கத்தை அப்படியே தக்க வைத்துக் கொண்டது. ஈரான் ஹோர்முஸை ஒப்பந்தத்தின் மையத்தில் வைத்திருந்தது. முடக்கப்பட்ட சொத்துக்களும், பொருளாதாரத் தடைகள் நீக்கமும் இப்போது பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வந்துள்ளன.



அதேவேளை லெபனான் போர்நிறுத்தக் கட்டமைப்பிற்குள் இழுத்துவரப்பட்டது. மேலும், இஸ்ரேல், எவ்வளவு கடுமையான பேச்சுக்கள் பேசினாலும், லெபனானில் அதன் நடவடிக்கைகள் காரணமாக இப்போது அழுத்தத்தை எதிர்கொள்கிறது. உண்மையில் அமெரிக்கா எதிர்பார்த்த முடிவு அல்ல. முக்கியமாக ஈரான் நசுக்கப்படும் என்று மேற்குலகும் அமெரிக்கர்களும் கூறினார்கள். தெஹ்ரான் சரணடைய நிர்பந்திக்கப்படும் என்று அவர்கள் கூறினார்கள். அதிகபட்ச அழுத்தம் அதிகபட்ச கீழ்ப்படிதலை உருவாக்கும் என்றும் கூறினார்கள். ஆனால் ஈரான் தனது புவியியல் அமைப்பு, பொறுமை மற்றும் பிராந்திய செல்வாக்கை பேரம் பேசும் சக்தியாக மாற்றிக் கொண்டது.

போரின் முடிவில் தற்போது புகழ்ச்சிக்காக அமெரிக்கா ஒரு தலைப்புச் செய்தியைப் பெறுகிறது. ட்ரம்ப் ஒரு வெற்றி உரையை நிகழ்த்துவார். இஸ்ரேல் பாரிய விரக்தியைப் பெறுகிறது. ஆனால் ஈரான் சர்வதேச அரசியலில் மிகவும் முக்கியமான ஒன்றைப் பெறுகிறது. உயிர் பிழைத்தல், செல்வாக்கு மற்றும் பேச்சுவார்த்தையில் ஓர் முக்கிய இடம் வகிக்கிறது.

**உலகம் புதிய அரசியல் கட்டத்தில்:**

இந்த நிகழ்வுகள் அனைத்தும் உலகம் ஒரு புதிய அரசியல் கட்டத்தை நோக்கி நகர்கிறது என்ற கருத்தை வலுப்படுத்துகின்றன. அமெரிக்கா இன்னும் உலகின் முக்கிய சக்தியாகத் திகழ்ந்தாலும், சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் பிராந்திய அளவில் ஈரான் போன்ற நாடுகள் மாற்று அதிகார மையங்களாக உருவெடுத்து வருகின்றன. உலக அரசியல் ஒரே மைய சக்தியைச் சுற்றி இயங்கிய காலத்திலிருந்து பலமைய சக்தி அமைப்பை நோக்கி நகர்கிறது என்ற வாதத்திற்கு இந்த மாற்றங்கள் ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

இந்தப் போரின் உண்மையான மரபு, போர்க்கள வெற்றிகளால் அல்ல, மத்திய கிழக்கின் அதிகாரச் சமநிலை, உலக எரிசக்தி சந்தைகள் மற்றும் சர்வதேச பாதுகாப்பு அமைப்பில் அது ஏற்படுத்திய நீண்டகால மாற்றங்களால் அளவிடப்படும். இந்த மோதல் ஒரு முக்கியமான பாடத்தை உலகிற்கு நினைவூட்டியுள்ளது. சில நேரங்களில் உயிர் பிழைத்திருப்பதே ஒரு வெற்றியாகும். அதேவேளை, இராணுவ வெற்றி மட்டுமே அரசியல் வெற்றியை உறுதிப்படுத்தாது. புதிய மற்றும் நிச்சயமற்ற ஒரு கால கட்டத்திற்குள் நுழையும் மத்திய கிழக்கின் எதிர்காலத்தை, இந்தப் போரின் விளைவுகள் இன்னும் பல ஆண்டுகள் வடிவமைத்துக்கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலக சந்தையில் விலை குறைந்தாலும் எரிபொருள் விலை உடனே குறையாது!

## கூறுகிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஜூன். 21

உலக சந்தையில் விலை குறைந்தாலும் உடனடியாக எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளபோதிலும், உள்நாட்டில் உடனடியாக விலையைக் குறைக்க முடியாது எனப் பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போது சந்தையிலுள்ள எரிபொருள் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டதுடன், அதன் சுமையின் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது.

"உண்மையான கணக்கீட்டின்படி ஒரு லீற்றர் எரிபொருள் 700 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்படவேண்டும். எனினும், அரசாங்கத்தின் நிவாரணம் காரணமாகவே அதனை 400 ரூபாய்க்கு வழங்க முடிகிறது. சாத்தியமான முதல் சந்தர்ப்பத்திலேயே விலை குறைப்பின் பலனை மக்களுக்கு வழங்குவோம்" என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டுகளைப் பிரதமர் முற்றாக நிராகரித்துள்ளார்.

நாட்டில் சட்டம் மட்டுமே நிலைநாட்டப்படுவதாகவும், குற்றம் செய்தவர்களுக்கு எதிராகச் சட்டம் தன் கடமையைச் செய்யும்போது அதனைக் மூடிமறைக்க எதிர்க்கட்சியினர் "அரசியல் பழிவாங்கல்" என்ற ஆயுதத்தைப் பயன்படுத்துவதாகவும் அவர் சாடினார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு வேலை செய்யத் தெரியாது என எதிர்க்கட்சிகள் விமர்சிப்பது குறித்துக் கேள்வியெழுப்பப்பட்ட போது அதற்கு பதிலளித்த பிரதமர்,

"இவ்வளவு காலமும் "வேலை தெரிந்த" நபர்கள்தானே ஆட்சியில் இருந்தார்கள்? அவர்கள் செய்த வேலை என்ன? நாட்டை வங்குரோத்தாக்கினார்கள், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்தார்கள். அந்த மாதிரியான வேலைகளைச் செய்ய எமக்குத் தெரியாது என்பது உண்மைதான்" என பதிலளித்தார். (அ)

# தமிழ்த்தரப்பு இந்திய அரசுடனான உறவை பலப்படுத்தவேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை



வவுனியா, ஜூன். 21

இந்திய அரசுடன் தமிழ்க்கட்சிகள் இராஜதந்திர உறவை பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அதுவே எமக்கு இருக்கும் ஒரே சந்தர்ப்பம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் 36ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர் முடிந்து 17 வருடங்கள் ஆகியும் எமது மக்களுக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைக் கூட எங்களால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

புதிய அரசியலமைப்பு விடயத்திலோ அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற விடயம் உட்பட பல விடயங்களில் இந்த அரசாங்கம் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறை வேற்றவில்லை.

மாறியுள்ள புதிய உலக அரசியல் ஒழுங்கானது மோசமான நிலைக்கு சென்றுள்ளதை அவதானிக்க முடியும். இஸ்ரேல் - ஈரான், உக்ரைன்-ரஷ்ய போர்களை பார்க்கும்போது ஐக்கிய நாடுகள் சபையை தொடர்ந்து நம்பிக்கொண்டிருப்பது தமிழ் மக்களை மீண்டும் பின்நோக்கி தள்ளுகின்ற நிலையை உருவாக்கும் என்பது புலனாகின்றது.

எனவே அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்க்கட்சிகள் ஒருபுள்ளியில் ஒன்றிணைய வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அந்த வகையில் இந்திய அரசுடன் தமிழ்க்கட்சிகள் ராஜதந்திர உறவை பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அது ஒன்றே எமக்கு இருக்கக் கூடிய சந்தர்ப்பம்.

இந்த அரசு தீர்வைத் தருவார்கள் என்று வெறுமனே பாராளுமன்றுக்குள் இருந்து எதனையும் செய்ய முடியாது.

தமிழர்களின் பிரச்னைகளை இராஜதந்திர ரீதியாக புதுடில்லி அரசாங்கத்துடன் பேசுவதனூடாகவே குறைந்தபட்சமான தீர்வையாவது காணமுடியும்- என்றார். (அ)

## அர்ச்சுனாவின் அட்டகாசங்கள்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னணியில் உள்ள. அரசியல் நோக்கம் தான் என்ன? அரசாங்கம் அர்ச்சுனாவைப் பயன்படுத்தி தமிழர் அரசியலைக் கேலிக் கூத்தாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் வலுவடைகிறது

பாராளுமன்றத்தில் உரையாற்றும் வேளைகளிலும் மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டங்களிலும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் அர்ச்சுனாவின் கண்ணியமற்ற உரைகளையும் மற்றையவர்கள் சகலரையும் "மடையர்கள்". என்ற நினைப்பில் அவர் செய்யும் அட்டகாசங் களையும் தலைமை தாங்குவோர் ஏன் தடுத்து நிறுத்துகிறார்கள் இல்லை?

கடந்தவாரம் இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நோக்கி அர்ச்சுனா "தூக்கியடிப்பண்டா, தூக்கியடிப்பண்டா" என்று பல தடவைகள் அட்டகாசமாக அச்சுறுத்திய போதிலும் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் (அவரும் ஒரு வைத்தியர்) பவானந்தராஜா ஏன் கண்டிக்கவிலலை? வன்முறை அச்சுறுத்தலுக்கு பிறகும் எதற்காக அவர் தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார்? அங்கிருந்த சபையோர் மத்தியில் இருந்து சிறிய எதிர்ப்புக்கூட வெளிக் காட்டப் படவில்லையே.

இலங்கை தேர்தல் முறையில் பதவிக் காலத்தின் நடுப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பதவியில் இருந்து நீக்கும் அல்லது திருப்பியழைக்கும் ஒரு முறைமை தற்சமயம் இல்லை என்றாலும் அடங்காப்பிடாரியான ஒரு சுயேச்சைப் பிரதிநிதியைக் கட்டுப்படுத்தும் இறுதி அதிகாரம் வாக்குப் பெட்டியிடம் மாத்திரமே இருக்கிறது.

அச்சுனாவின் கேவலமான நடத்தைகளை மனதில் வைத்து வடபகுதி வாக்காளர்கள் எதிர்காலத்தில் அவர் தேர்தல்களைப் பற்றி கனவிலும் நினைத்துப் பார்க்காத வகையில் பாடத்தைப் புகட்ட வேண்டும்.

அவரைப் போன்ற வக்கிரத்தனமான - தமிழ்ப் பெண்குலத்தை அவதூறு செய்கின்ற நச்சுச் சக்திகளை அரசியல் பக்கம் தலை வைத்துப் படுக்காமல் செய்ய வேண்டும்.

அவரைக் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்த வாக்காளர்களே நீங்கள் தமிழ்ச் சமூகத்துக்குச் செய்த அநியாயத்தை இப்போதாவது நினைத்து மனம் வருந்துகிறீர்களா? இல்லை...!

# வடமாகாணக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு மேல் சம்பள உயர்வு இல்லை

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 21

வடமாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு மேலாக சம்பள உயர்வுகள் வழங்கப்படாது, வடமாகாண கூட்டுறவு பணியாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்காதுவிடின் கூட்டுறவு நிகழ்வுகளை புறக்கணிப்போம் என வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க தலைவர் ஆர்.செபஸ்தியான் பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டுறவுச் சங்கங்கள் தரப்படுத்தப்பட்டு, ஊழியர்களுக்கான சம்பளங்கள் வகுப்பட்டன. ஆனாலும் இன்றுவரை சம்பளங்கள் உயர்த்தப்படவில்லை.

கூட்டுறவுச் சங்களில் ஒன்று தொடக்கம் 17 வரையில் சம்பளங்கள் வகுப்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட காலமாக சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் குறைந்த சம்பளத்தை வைத்து குடும்ப வாழ்வாதரத்தை கொண்டு செல்ல முடியவில்லை. 2025,2026 மற்றும் 2027ஆம் ஆண்டுகளில் அரச, தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

ஆனால் கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை. எமது சம்பளங்களை அதிகரிக்கவேண்டும். எமது சம்பளப் பாகுபாட்டை எதிர்காலத்தில் தீர்த்துக்கொண்டாலே எமது பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

வடக்கில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான பணியாளர்கள் உள்ளனர். இருந்தும் அரசாங்கம் எம் மீது கரிசானை காட்டவில்லை- என்றார். (அ)

## அமெரிக்காவுடனான...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்க வேண்டும். பிற நாடுகள், அவர்களின் நகரங்கள் மற்றும் பொதுமக்கள் மீது குண்டு வீசுவது ஏதோ "வேலை செய்கிறது" என்ற கோட் பாட்டை இது முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இரண்டாம் உலகப் போருக் குப் பிறகு, விமானப் படைகளின் இரும்பு விதி என்னவென்றால், குண்டுவீச்சு என்பது எப்படியோ மக்களைப் பயமுறுத்தி, அவர்களின் தவறுகளை உணரச் செய்யும் என்பதாகும். அது அவர்களைச் சரணடையவும், அரசியல் நடவடிக்கை மற்றும் கிளர்ச்சியை நோக்கியும் தூண்டும் என்று நம்பப் பட்டது. பயங்கரவாதத்தின் வீரியத்தின் மீதான இந்த நம்பிக்கை, அல்-கொய்தா போன்ற குழுக்களின் உத்தியில் இருந்து வேறுபட்டதல்ல.

நவீன வான்வழிப் போரின் அதிசயங்கள் என்னவென்றால், குண்டுவீச்சாளர்கள் ராணுவ இலக்குகளைத் துல்லியமாகத் தாக்குவதாகத் தொடர்ந்து உரிமை கோருகின்றனர். அவர்கள் "பயங்கரவாதி களை" மட்டுமே கொல்வதாகக் கூறுகிறார்கள். அதற்கு நாம் அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு ஈரானியரு க்கோ, பாலஸ்தீனியருக்கோ அல்லது லெபனானி யருக்கோ, பொதுமக்கள் மீது குண்டுவீசுவது என்பது ஒரு அரசு நடத்தும் பயங்கரவாதமே ஆகும். இது வன்முறை மற்றும் பயத்தின் மூலம் ஓர் அரசியல் விளைவை ஏற்படுத்த முயலும் ஒரு முயற்சியாகும். இதனால் ஒரு அரசியல் விளைவு கூட ஏற்பட்டதாக எனக்குத் நினைவில்லை. ஆக்கி ரமிப்புப் போர்களில், இதன் தோல்வி பொதுவாகத் தரையில் நடக்கும் அடுத்தடுத்த ராணுவ நடவடிக்கைகளால் மறைக்கப்பட்டு விடுகிறது.

ஒரு உலக வல்லரசுக்கு பெருமளவிலான குண்டு வீச்சு ஏற்படுத்தும் ஈர்ப்பு எளிதாகப் புரியக்கூடி யது. அதை விரைவாக அரங்கேற்ற முடியும். அது சத்தத்தை உருவாக்குகிறது, தொலைக்காட்சிக ளுக்கு ஏற்றதாக இருக்கிறது, மேலும் ஆக்கிரமிப் பாளர்களின் தரப்பில் உயிர்ச்சேதங்களைக் குறைக் கிறது. இந்த குணாதிசயங்கள் ராணுவ உத்திகளை மாற்றிமைக்க நீண்டகாலமாகப் போதுமானதாக இருந்துள்ளன.

வியட்நாமை குண்டுவீசி "கற்காலத்திற்கு" கொண்டு செல்ல முடியும் என்று அமெரிக்கா நம்பியது. ஆனால் அது ஒரு தோல்வி. ஆப்கானி ஸ்தான் மற்றும் ஈராக்கைப் போலவே, வீரர்களும் தரையிறங்கிச் செயல்பட வேண்டியிருந்தது. ஆனாலும், டிரம்ப்பும் அவரது பாதுகாப்புச் செயலர் பீட் ஹெக்செத்தும் (Pete Hegseth) அதே கற்கால உவமையை ஈரானிலும் அப்படியே மீண் டும் பயன்படுத்தினர். இதில் சொல்லக்கூடிய ஒரே நல்ல விஷயம் என்னவென்றால், அவர்கள் தங்கள் தவற்றை விரைவில் உணர்ந்து கொண்டனர்.

எனவே, மத்திய கிழக்கை தனது சொந்த விருப்பப்படி மாற்றியமைக்க அமெரிக்கா மேற்கொண்ட மற்றொரு திக்கற்ற முயற்சி, பயங்கரமான இழப்பு களுடன் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த போரின் மரபு, இதுபோன்ற அனைத்து முயற்சிகளையும் நிராகரிப்பதாக அமையும் என்று மட்டுமே நம்ப முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணாமற்போனவர்களுக்காக...

வழங்குவது மட்டுமல்ல. கடந்த காலத்தில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்த உண்மையை முழுமையாகக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கையை மறுபடி கட்டியெழுப்புவதே முதன்மைக் குறிக்கோளாகும்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது, காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு 11,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

தேங்கிக் கிடக்கும் இந்த முறைப்பாடுகளை மிக விரைவாக விசாரித்துத் தீர்ப்பதற்காக, விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் 375 மில்லியன் ரூபா நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 75 அதிகாரிகளைக் கொண்ட 25 விசாரணைக் குழுக்கள் தற்பொழுது களத்தில் இறக்கப்பட்டு விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த போதிலும், காணாமற்போனவர்களின் பிரச்சினைகள் இன்னும் தொடர்வதற்குக் கடந்த கால அரசாங்கங்கள் இப்பிரச்னையை முறையாகக் கையாளவில்லை என்பதே சான்றாகும். உறவினர்கள் பலமுறை பல ஆணைக்குழுக்களிடம் அலைந்து திரிந்து முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த காலத் துயரங்களை முழுமையாக மறந்துவிட வேண்டும் என நான் கூறவில்லை. எனினும் புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, புதிய சிந்தனையுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

வடக்கு மற்றும் தெற்கு என இரு பிராந்தியங்களில் உள்ள அனைத்து மக்களின் மனங்களையும் வென்றே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. எனவே, காணாமல் போன நபர்களுக்கு விரைவான நீதியையும் இப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான முடிவையும் வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது-என்றார். (அ)

## வட்டுக்கோட்டை...

நேற்று பிற்பகல் 3 மணியளவில் தந்தை செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தி குறித்த நிகழ்வு ஆரம்பமானது.

அதன்பின் மணிக்கூட்டு கோபுரம் சதுக்கத்தை ஊர்வலமாக வந்தடைந்த நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு வீற்றிருக்கும் தமிழ் மும் மன்னர்களுக்கும் அஞ்சலி செலுத்தி நிகழ்வின் ஏற்பாட்டு மண்டபத்தை சென்றடைந்த நிலையில் தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் பொதுச் சுடரேற்றப்பட்டு மாநாடு தமிழ் தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு மட்டக்களப்பு ஆதீன முதல்வர் அகத்தியர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

மாநாட்டில் ,ந்து, கிறித்தவ மத குருமார்கள் அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் நூற்றுக்கணக்கான பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

## நெடுந்தீவு அரசு...

மேலதிக அரச படகுகளை சேவையில் ஈடுபடுத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையேயான சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பிலுள்ள வடதாரகை , நெடுந்தாரகை என்பன திருத்த வேலைகள் முடிந்து தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## கச்சதீவை மீள...

காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுள்ள அவர், சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே இதனைச் சுட்டிக்காட்டினார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் எல்லைத் தாண்டும் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வாக கச்சதீவு விவகாரத்தைக் கையில் எடுப்பது புத்திசாலித்தனமான அணுகுமுறை அல்ல என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

கச்சதீவை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதன் மூலம் மீனவர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சர்வதேச சட்டக் கட்டமைப்புகளின் அடிப்படையில் கச்சதீவின் மீதான இலங்கையின் இறையாண்மையை இந்திய மத்திய அரசு எப்போதோ ஏற்றுக்கொண்டுள்ளது-என்றார்.

இதனை சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பாக மாற்றியமைக்க வேண்டுமெனில் இராணுவ நடவடிக்கை மூலம் மட்டுமே சாத்தியம் என்றும், ஆனால் இந்திய அரசு ஒருபோதும் அத்தகைய பாதையைத் தேர்ந்தெடுக்காது என்றும் அவர் விளக்கமளித்தார்.

அத்துடன், கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழாவுக்குச் செல்லும் இந்திய பக்தர்களுக்கு இலங்கை கடற்படை எவ்வித தடையும் விதிப்பதில்லை என்றும், எல்லையைத் தாண்டி சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபடும்போதே அது பெரும் நெருக்கடியாக மாறுகிறது என்றும் ரவூப் ஹக்கீம் மேலும் கூறினார். (அ)

## மாகாண சபை...

தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல்கள் இத்தனை காலம் தாமதமாகியிருப்பதற்கு பாராளுமன்றம் மற்றும் நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளுமே கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும்.

அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்துக்கு இதில் பெரும்பங்கு உண்டு. தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பதைத் தீர்மானிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளதால், பழைய முறையிலா அல்லது புதிய முறையிலா தேர்தலை நடத்துவது என்பது குறித்து அவர்களால் தீர்மானிக்க முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் இது தொடர்பான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த விவகாரத்தை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அனுப்பி, அதன் அனுமதியைப் பெற்று தேர்தலை நடத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பல வருடங்களாக மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி, ஆளுநர்கள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் மட்டுமே இயங்கி வருகின்றன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத அதிகாரிகளின் ஆட்சி ஒருபோதும் மக்கள் ஆட்சியாகாது, இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு எதிரானது.

ஒருவேளை கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்தத் தீர்மானித்தால், எல்லை நிர்ணய அறிக்கையை மறுசீரமைக்க புதிய எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைத்து அந்தப் பணிகளை முடிக்கக் குறைந்தது 4 மாதங்களாவது தேவைப்படும்.

எனவே, இந்த ஆண்டுக்குள் தேர்தலை நடத்த முடியாது.

திறைசேரியில் பணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, நிதி இல்லை என்றும் அந்தப் பணம் டித்வா பாதிப்புகளை சீர்செய்ய செலவிடப்பட்டுவிட்டதாகவும் கூறியிருந்தார்.

பணத்தை அவ்வாறு டிட்வா செலவுகளுக்கு செலவிட்டதாகக் கூறுவது ஒரு சுவாரசியமான விடயம். நாங்கள் அரச சேவையில் இருந்த காலத்தில் அப்படி ஒரு விடயத்தைக் கேள்விப்பட்டதில்லை. இப்போது அப்படி ஏதும் முறை இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை-என்றார். (அ)

## 11,790 மாணவர்கள்...

குமாரி தெரிவித்துள்ளார்.

இம்முறை பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் “ஏ” சித்தி பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 790 எனவும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு குறித்து தெளிவுபடுத்துவதற்காக நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் “ஏ” சித்தி பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 790 ஆகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களின் வீதம் அதிகரித்துள்ளது.

இதன்படி, இம்முறை விஞ்ஞான பாடத்தில் 70.1சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், கடந்த வருடம் அது 69.07 வீதமாகக் காணப்பட்டது.

மேலும், கணிதப் பாடத்தில் இம்முறை 72.03சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், கடந்த வருடம் அது 71.06 வீதமாகக் காணப்பட்டது-என்றார். (அ)

## வடக்கில் 566...

இம்முறை வெளியான பெறுபேறுகளின்படி, வடக்கு மாகாணத்தில் 566 மாணவர்கள் 9 பாடங்களிலும் “ஏ” சித்தியைப் பெற்றுள்ளனர். அத்துடன், அகில இலங்கை ரீதியான மாகாண மட்ட அடைவு நிலைகளின் அடிப்படையில், இம்முறை வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் 8ஆம் இடத்தைப் பெற்று முன்னேற்றம் கண்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணம் 69.87 சதவீதத் தேர்ச்சியுடன் தேசிய மட்டத்தில் 9ஆம் இடத்தைப் பெற்றிருந்தது.

கடந்த ஆண்டு தரவுகளுடன் ஒப்பிடுகையில், இம்முறை மாணவர்களின் உயர்தரத்துக்கான தேர்ச்சி வீதத்திலும், தேசிய மட்ட தரவரிசையிலும் வடக்கு மாகாணம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 627 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத்தவறியுள்ளனர். (அ)

## சோமரத்ன ராஜபக்ஷவை...

செம்மணி மனித புதைகுழியை பார்வையிடச் சென்றிருந்தமை குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிருஷாந்தி கொலை வழக்கில் சோமரத்தன ராஜபக்ஷ என்பவர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கின்றார்.அவர் செம்மணி உள்ளிட்ட இடங்களின் பல பகுதியிக ளில் பல உடலங்களை தாம் புதைத்துள்ளதாக அவரே கூறியுள்ளார்.

அதனை அடையாளம் காட்ட தயாராகவுள்ளதாகவும் அவர் தன் மனைவி ஊடாக கடிதத்தின் வாயிலாகவும் பல பொதுவெளிகளிலும் கூறி இருக்கின்றார்.

சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எந்தெந்த பகுதிகளில் புதைகுழிகள் இருந்தன என்பதை அடையாளம் காண அவர் முற்படவில்லை.

இந்நிலையில் சோமரத்ன என்பவர் இன்னமும் கூட தான் இடங்களை அடையாளம் காட்ட தயாராகவுள்ளதாக தற்போதும் கூறிக்கொண்டுள்ளார்.

இத்தகைய பின்னணியில் செம்மணி மாத்திரமல்லாமல் இன்னும் பல இடங்களில் புதைகுழிகள் இருக்கலாம்.

ஆகவே இந்த அரசாங்கம் சோமரத்ன ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் வரவழைத்து புதைகுழிகள் உள்ள இடங்களை அடையாளம் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

## முன்னாள் அமைச்சர்களை...

பிறப்பிக்கும் ஒவ்வொரு பிடியாணைகள் தொடர்பில் காவல்துறை நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார்.

பல முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வழக்குகளிலும் அதே சட்ட நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலிஸ் திணைக்களம் நீதிமன்ற உத்தரவுகளை சட்டத்திற்கு இணங்க செயல்படுத்தி வருகிறது. சந்தேக நபர்களை நாட்டுக்கு திரும்ப அழைப்பதை உறுதிசெய்ய தேவைப்படும் இடங்களில் சர்வதேச ஒத்துழைப்பை அரசாங்கம் நாடும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (அ)

## சவக்காரத்துக்கு வரி...

கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாதாரண நுகர்வோர் பயன்படுத்தும் ஒரு சவக்காரத்துக்காக 21.5 வீதம் முதல் 22 வீதம் வரை வற் வரி அறவிடப்படுவதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஏழை எளிய மக்களின் மீது கடுமையான வரிப்பளு சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் காலங்களில் பந்துக்கு பந்து பந்தயம் கட்டும் ஒன்லைன் சூதாட்ட நிறுவனங்களிடமிருந்து ஒரு சதம் கூட வரியாக அறவிடப்படுவதில்லை. அரசாங்கத்தின் சின்னங்களைப் பயன்படுத்தி இவ்வாறான விளம்பரங்கள் தாராளமாக முன்னெடுக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கு வரி விதிக்கப்படுவதில்லை.

அத்துடன் குறிப்பிட்ட சில சூதாட்ட நிறுவன பணிப்பாளர்களிடமிருந்து வரிகளை அறவிடுவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாகக் கால அவகாசங்களை வழங்கி வருகின்றது.

இவ்வாறான நிறுவனங்களிடமிருந்து வரிகளை அறவிடுவதற்கான சட்டமூலத்தை ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதாகக் கூறப்பட்டது. தற்போது இன்னும் இரண்டு வாரங்களே எஞ்சியுள்ளன.

சாதாரண நடுத்தர வர்த்தகர்களையும், பொதுமக்களையும் வரியின் மூலம் ஒடுக்கும் அரசாங்கம், பெரும் சூதாட்ட நிறுவனங்களுக்குச் சலுகை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பிட்ட திகதிக்குள் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க நேரிடும்-என்றார். (அ)

## வாய் மூலம் உணவு...

போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மருத்துவ விஞ்ஞான முறைகளின் ஊடாக உடலுக்குத் தேவையான திரவ ஆகாரங்கள் அல்லது ஊட்டச்சத்துக்களைப் பெற்றுக்கொள்வதை சுரேஷ் சாலே நிராகரிக்கவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்தகைய மருத்துவ முறையிலான ஊட்டச்சத்துக்கள் இன்றி எவராலும் இவ்வளவு காலம் பட்டினியுடன் உயிர்வாழ முடியாது எனத் தெரிவித்த அமைச்சர், முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரின் இந்த முயற்சி பயனற்ற ஒரு செயலாகும் என்றும் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# பாடசாலை உணவகங்களில் துரித உணவுகளுக்குத் தடை!

கொழும்பு, ஜூன். 21

பாடசாலை மாணவர்களின்உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கில், பாடசாலை உணவகங்களில் விற்பனை செய்யப்படும் பல்வேறு வகையான ஆரோக்கியமற்ற மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கு அதிரடித் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, விசேட மருத்துவர் புத்திக்கா சுதசிங்ஹ இதனைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டும், அவர்களின் உடல் வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் அதிக கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை கொண்ட உணவுகளைப் பாடசாலைகளில் முற்றாகத் தவிர்ப்பதற்கும் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி, பின்வரும் உணவுப் பொருள்கள் இனிவரும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்காக உணவகங்களில் விற்பனை செய்யப்பட மாட்டாது என விசேட மருத்துவர் புத்திக்கா சுதசிங்ஹ சுட்டிக்காட்டியுள்ளார்.

சோசேஜஸ் , மீட் போல்ஸ், பேக்கன் போன்ற பதப்படுத்தப்பட்ட இறைச்சி உணவுகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அதிகம் விரும்பும் பர்கர், ஹொட் டொக், சப்மரின் மற்றும் பீட்சா போன்ற துரித உணவுகள்.

கிரீம் பனிஸ், ஜாம் பனிஸ், பேஸ்ட்ரி வகைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின்ஆரோக்கியத்தைக் கெடுக்கும் எண்ணெயில் பொரிக்கப்பட்ட சிற்றுண்டிகள்.

உடனடி நூடுல்ஸ் , சூப் கட்டிகள், தக்காளி மற்றும் சோயா சோஸ் வகைகள்.

சுவிங்கம், லொலிபாப், ஜெலி வகைகள், ஐஸ் பைக்கெற் மற்றும் பாடசாலை மாணவர்கள் எளிதில் விரும்பி உண்ணும் அதிக சர்க்கரை கொண்ட இனிப்புகள்.

காபனூட்டப்பட்ட குளிர்பானங்கள், செயற்கை நிறமூட்டிகள் சேர்க்கப்பட்ட பழச்சாறுகள் மற்றும் பாக்கெட் பானங்கள் என்பவற்றை விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களை சிறு வயது முதலே தொற்றா நோய்களில் இருந்து பாதுகாக்கவும், அவர்களிடம் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கவும் இந்த நடவடிக்கை மிகவும் அவசியமானது என விசேட மருத்துவர் புத்திக்கா சுதசிங்ஹ மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# சென்னையில் போலி ஆவணங்கள் வைத்திருந்த யாழ். இளைஞர் கைது!

சென்னை, ஜூன். 21

சட்டவிரோதமாக தமிழ்நாட்டுக்கு படகில் சென்று, போலி ஆவணங்கள் மூலம் சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கை இளைஞர் ஒருவர் சென்னை - ஆவடி பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா சென்ற இவர், கன்னியாகுமரி, திருச்சி, சென்னை உள்ளிட்ட பகுதிகளில் தங்கி உணவகங்களில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இதற்கிடையில், போலி ஆவணங்கள் தயாரித்து அதன்மூலம் ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகளையும் அவர் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆவடி - சேக்காடு பகுதியில் பெண் ஒருவருடன் குறித்த இளைஞர் வசித்து வந்துள்ளார்.

இந்தநிலையில், அவர் திடீரென மாயமானதாக அந்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், குறித்த இளைஞரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து பொலிஸார் விசாரணை நடத்தியபோதே, அவர் விஸா இன்றி போலி ஆவணங்களுடன் தங்கியிருந்தமை அம்பலமாகியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த இளைஞரிடம் பொலிஸார் தொடர்ந்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# அரச களஞ்சியங்களுக்கு நெல் வழங்காது சில விவசாயிகளும் தவறிழைத்துள்ளனர்!

## விவசாய பிரதி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 21

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், அவற்றுக்குத் தங்களது நெல்லை ஒப்படைக்காத விவசாயிகளும் தவறிழைத்துள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தற்போது நெல்லை விற்க முடியாமல் உள்ளதாகவும், அரசாங்கத்தின் களஞ்சியசாலைகளைத் திறக்குமாறும் ஒரு குழுவினர் கூச்சலிட்டு வருகின்றனர். களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டிருந்தபோது ஏன் அவர்கள் நெல்லைக் கொண்டு வந்து ஒப்படைக்கவில்லை என்றுதான் எமக்குக் கேட்கத் தோன்றுகின்றது. எனினும், தற்போது பெரும்பாலான நெல் விவசாயிகளிடம் இல்லை. ஒருவேளை விவசாயிகள் நெல்லைத் தங்களிடமே வைத்திருந்தார்கள் என்றால், அவர்களும் தவறிழைத்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டிருந்தபோது அவற்றை ஒப்படைத்திருக்கவேண்டும் அல்லவா? ஏன் அவர்கள் நெல்லைச் சேர்த்து வைத்திருந்தார்கள்? தங்களுக்கு ஏதேனும் இலாபம் கிடைக்கும் என்ற நோக்கில்தானே அவ்வாறு வைத்திருந்தார்கள்? மறுபுறம், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சேர்த்து வைத்துள்ள இடைத்தரகர்கள் குழுவொன்றும் இங்கு காணப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து, பின்னர் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக நெல்லைச் சேமித்து வைத்துள்ள குழுக்கள் இருக்கக்கூடும். அவர்கள்



தான் தற்போது பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனினும், அந்தப் பிரச்னைக்கும் நாம் செவிசாய்க்க வேண்டும், அது குறித்து நாம் தனியாகக் கலந்துரையாடுவோம் என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

(அ)

# சமிந்த குலரத்னவின் மனு: ஜூலை 20 இல் விசாரணை!

கொழும்பு, ஜூன். 21

பாராளுமன்ற பிரதிப் பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன தனது பணிநீக்கத்துக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனுவை, எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி உண்மைகளை உறுதிப்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னை பணியில் இருந்து இடைநிறுத்துவதற்கு சபாநாயகர் எடுத்த முடிவு சட்டவிரோதமானது மற்றும் செல்லுபடியற்றது என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ரொஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஆயத்த அமர்வு முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரரான சமிந்த குலரத்ன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, இந்த விவகாரம் தொடர்பான உண்மைகளை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தத் தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

சபாநாயகர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகேஸ்வரன், அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோர் சார்பில் முன்னிலையான நைஜல் ஹட்ச் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாமர நாணயக்காரவசம் ஆகியோர், இந்த மனுவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதிலுள்ள சட்டப்பூர்வத்தன்மை குறித்து ஆரம்பக்கட்ட பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுப்பவுள்ளதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

இரு தரப்பு சமர்ப்பிப்புகளையும் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மனுவை மீண்டும் வரும் ஜூலை 20 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டது.

முறையான மற்றும் நியாயமான விசாரணை எதுவும் நடத்தப்படாமல், சபாநாயகர் தன்னிச்சையாக எடுத்த இந்த பணியிடை நீக்க முடிவு சட்டத்திற்குப் புறம்பானது என சமிந்த குலரத்ன தனது மனுவில் வாதிட்டுள்ளார். (அ)

# மட்டக்களப்பைச் சென்றடைந்த கதிர்காம பாத யாத்திரைக் குழு



யாழ்ப்பாணம், ஜூன். 21

மட்டக்களப்பைச் சென்றடைந்த கதிர்காம பாத யாத்திரைக் குழுவினருக்கு தொண்டைமதொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நேற்று சனிக்கிழமை 7ஆம் கட்டமாக ஒரு இலட்சத்து 15ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துமா பைக்கெற்றுக்கள், பிஸ்கட் பைக்கெற்றுக்கள் மற்றும் சவர்க்கார வகைகள் என்பனவற்றை வழங்கியது.

சந்நிதியான் ஆச்சிரம பொறுப்பாளர் சைவத்திரு செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் மட்டக்களப்புக்குச் சென்ற குழுவினர் மட்டக்களப்பு வந்தாறுமூலை மகா விஷ்ணு ஆலயத்தில் தங்கியிருந்த யாத்திரைக் குழுவினருக்கு இவற்றை வழங்கினர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதிதொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் ஊடாக பயணித்து நேற்று சனிக்கிழமை வந்தாறு மகா விஷ்ணு ஆலயத்தைச் சென்றடைந்தது.

தொடர்ந்து உகந்தை முருகன் ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்து காட்டுப்பாதை ஊடாக கதிர்காமத்தை சென்றடையும். (அ-02)

# இலங்கைக்கு அதிக வெளிநாட்டு வருமானம் ஈட்டித் தந்த குவைத்!

கொழும்பு, ஜூன். 21

கடந்த 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவிலான புலம்பெயர் தொழிலாளர் பணப்பரிமாற்றத்தை வழங்கிய நாடுகளின் வரிசையில் குவைத் முதலிடத்தைப் பிடித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், குவைத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 893 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்கு அனுப்பியுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த நாடுகளின் பட்டியலில் குவைத் முதலாமிடத்திலும் இரண்டாமிடத்தில் கட்டாரும் ஐக்கிய அரபு இராச்சியம் தொடர்ந்து மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media